Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 6 (22-11-66) இதழ் 282

பராபவ ஷஃபான் 8 கார்த்திகை 7 செவ்வாய்க்கிழமை

**ஈழநாடு**
**சந்தா விபரம்**

| | |
|---|---|
| **இலங்கை-இந்தியா** | |
| ஒரு வருடம் | ரூ. 50-00 |
| ஆறு மாதம் | ரூ. 26-00 |
| மூன்று மாதம் | ரூ. 14-00 |
| **மலேசியா** | |
| ஒரு வருடம் | ரூ. 70-00 |
| ஆறு மாதம் | ரூ. 38-50 |
| மூன்று மாதம் | ரூ. 20-50 |

தினசரி பிரதி: 10 சதம்
வாரப் பதிப்பு பிரதி 20 சதம்

## அறிக்கை மறைந்த மாயம்

கொழும்பு, திங்கள்
மீன்பிடிக் கூட்டு ஸ்தாபனத்தில் அந்தரங்க அறிக்கையொன்று திடீரென மாயமாக மறைந்துவிட்டதாம்.

# வர்த்தகக் கொள்கை மாற்றம்

## அரசாங்க ஏகபோகம் நீங்கிவிடும்

### அமைச்சர் ஜே. ஆர். தகவல்

கொழும்பு, திங்கள்

தேசிய அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கையில் பெரும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வர்த்தகத்தில் அரசாங்கத்தின் ஏக போக உரிமையை நீக்குவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. வர்த்தகர்கள், வர்த்தக ஸ்தபனப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில் ராஜாங்க அமைச்சர் திரு.ஜே. ஆர். ஜயவர்த்தனஇன்று பேசுகையில் வர்த்தகத்தில் தனியார் துறையினருக்குஉரிமை அளிக்கப்பட இருப்பது பற்றியும் வர்த்தகத்தில் அரசாங்கத்துக்கு ஏக போக உரிமை இருப்பதிலுள்ள குறைகள் பற்றியும் எடுத்துக்கூறினர்,

வர்த்தகர் சபை, வர்த்தகர் சங்கம், ஏற்றுமதி, இறக்குமதிக்கட்டுப்பாட்டதிகாரியிடம் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகர்கள், மற்றும் சிறிய பெரிய வர்த்தகர்களும் ராஜாங்க அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்ட மகாநாடு ஒன்று இன்றுகாலை 'கோல்பேஸ் ஹோட்டலி'ல் நடைபெற்றது. இம் மகாநாட்டில் அமைச்சர் திரு. ஜயவர்த்தன ஆரம்பஉரை நிகழ்த்தினர்.

தேசிய அரசாங்கம் இதுவரை கடைப்பிடித்து வந்த வர்த்தகக் கொள்கையின் போக்கில் திருப்பம் ஏற்பட்டுள்ளதை திரு. ஜயவர்த்தன தமது உரையில்எடுத்துக் காட்டினர். வர்த்தகத்தில் அரசாங்க ஏகபோகத்தை அவர் நிராகரித்தார். வர்த்தகத்தில் அரசாங்கம் கவனம் செலுத்துவதோ, வர்த்தக உரிமைகளை அது ஒரே இடத்தில் குவித்து வைத்திருப்பதோ சரியானதல்ல என்று அமைச்சர் கூறினர்.

அதிநேர்மை, அதிறமை, அரசாங்கக் கட்டுப்பாடு இம் மூன்றும் அரசாங்க வர்த்தகத்துக்கு மிக மிகத் தேவையென்று திரு.ஜயவர்த்தன கூறினர்.

அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் வர்த்தகம் நடைபெறும்நாடுகள் பெரும்பாலும் சர்வாதிகார ஆட்சி அமைப்பிலிருக்கிறதென்றும் திரு.ஜயவர்த்தன கூறினர்.

அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கையை அமுல் செய்வதற்கு தனியாரின் ஒத்துழைப்புஅவசியமென்று அவர் சொன்னர். வர்த்தகம் கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாக இருக்கவேண்டுமென்றும் அவர் கூறினர்

## யாழ். எஸ். பி. மாற்றம்

யாழ்ப்பாணம் செவ்.

யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரண்டெண்டென் திரு. தளையசிங்கம் வருகிற ஜனவரி முதலாம் தேதியிலிருந்து கொழும்புக்கு இடமாற்றலாகிச் செல்கிருர். மாத்தளை உதவி பொலிஸ் சுப்பிரிண்டென்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் இவரது இடத்துக்கு பொறுப்பாளராக ஜனவரி முதலாம் தேதியிலிருந்து பதவியேற்பார்.

சிங்கள அமுலுக்கு

## பழைய ஊழியர்கள் தடையாக இருக்கிருர்களாம்

### பிரதமரிடம் புகார்

கொழும்பு, திங்கள்

அரசாங்க சேவையிலுள்ள சிங்களத்தில் கடமையாற்ற முடியாத ஊழியர்கள் பெரிய பதவிகளில் இருந்துகொண்டு சிங்கள மொழி அமுலாவதற்குத் தாமதம் ஏற்படுத்தி வருகிருர்களென்று அரசாங்க சேவை சுயபாஷை குமாஸ்தாக்கள் சங்கம் பிரதம மந்திரியிடம் புகார் கூறியுள்ளது.

இச்சங்கத்தின் பிரதிநிதிகள் இன்று பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்திஞர்கள். பேச்சுவார்த்தைகளின் போது திறைசேரி காரியதரிசி திரு. எஸ். கே. சமரக்கொடியும் பிரசன்னமாயிருந்தார்.

அரசாங்க ஊழியர் சிங்களத்தில் பயிற்சிபெறுவது பற்றிய திறைசேரியின் சுற்றறிக்கைகள் திருத்தப்படவேண்டுமென்றும், சிங்களத்தில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தேர்ச்சி பெறாதவர்களும் புதிய ஊழியர்கள்வேலை நீக்கம் செய்யப்படவேண்டுமென்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சிங்களத்தில் தகுதிபெற்ற அரசாங்க ஊழியர்கள் சிங்களத்திலேயே சேவைபுரிய கட்டாயப்படுத்தப்படவேண்டுமென்றும் அரசாங்க அலுவலகங்களில் சிங்களத்தில் கிடைக்கப்பெருத கடிதங்கள் யாவும் திருப்பி அனுப்பப்படவேண்டுமென்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## "பட்டம் பெறுபவர்களால் பட்டங்கள் பெருமையடைகின்றன"

### பாராட்டு விழாவில் பேச்சு

திருநெல்வேலி, செவ்.

சிலருக்குப் பட்டங்கள் கொடுத்து அதனுல் அவர்கள் சிறப்புப் பெறுகிருர்கள். மற்றும் சிலருக்குப் பட்டங்கள் கொடுப்பதால் அந்தப் பட்டங்கள் சிறப்புப் பெறுகின்றன. இந்த வகையில் திரு. சீனிவாசத்துக்கு சமாதான நீதவான் பட்டம் கொடுக்கப்பட்டதால் சமாதான நீதவான் பட்டம்தான் பெருமை பெற்றுள்ளது" என்று முதலியார் ஸி. முத்துத்தம்பி நேற்று மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் வித்தியாலய ஆசிரியரும், கூட்டுறவாளரும், ஆலய தர்மகர்த்தாவுமான திரு து. சீனிவாசகத்துக்கு அரசினர் 'சமாதான நீதவான்' பட்டம் வழங்கிக் கௌரவித்ததையிட்டு அளிக்கப்பட்ட பாராட்டு உபசாரவைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் வி. ரி. பசுபதி தலைமையில் நடைபெற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

வர்த்தக ஊழியர் பிரச்னை

## முட்டுக்கட்டையைத் தீர்க்க மந்திரி மீண்டும் முயற்சி

### இருதரப்பாரோடும் பேச்சுவார்த்தை ஆரம்பம்

கொழும்பு, திங்கள்

67 வர்த்தக ஸ்தாபனங்களில் நடைபெற்றுவரும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்க அங்கத்தவர்களின் வேலைநிறுத்தப்பிரச்னைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையைத் தவிர்க்கும் நோக்கத்துடன் இன்று தொழில் மந்திரி திரு. எம். எச். எம். முகம்மது மீண்டும் முதலாளிமார் சம்மேளனத்துடனும் வர்த்தக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளார்.

இப்பிரச்னையில் ஏற்பட்ட முட்டுக்கட்டைக்கு மந்திரியின் 8 அம்சத்திட்டத்தில் போனஸ் விஷயம் பற்றிய

என்றும் ஆனல் இறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையென்றும் அந்தஅறிக்கை கூறுகின்றது.

அம்சமே முக்கிய காரணமாக இருந்துள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை பிள்ளைகளின் வேலை அனுபவத்திட்டம்

கொழும்பு, திங்கள்

பாடசாலைப்பிள்ளைகளுக்கு வேலை அனுபவத்திட்டங்கள் அடுத்த வாரத்தில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றன.

பாடசாலைப் பிள்ளைகளுக்கான மீன்பிடித்திட்டம் இம் மாதம் இருபத்திபொன்பதாம் திகதி சிலாபத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும். இதில் ஏழு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து நீர்கொழும்பில் இரண்டாவது கட்டம் ஆரம்பித்து வைக்கப்படும். மீனை உலர்த்துவது போன்ற வேலைகள் இக்கட்டத்தில் இடம்பெறும்.

## அமைச்சின் மறுப்பு

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயக்குழுவின் கூட்ட நிகழ்ச்சிகள் அடுத்தசித்திரை மாதம் தொடக்கம் தமிழில் நடைபெறும் என்ற வெளிவந்த பத்திரிகை செய்திகளை மறுத்து உள்நாட்டு அமைச்சு ஒரு அறிக்கைவெளியிட்டிருக்கிறது.

கூட்டத்தின் நிகழ்ச்சிகள் தமிழில் நடைபெற வேண்டும் என்று காங்கேசன்துறை எம், பி, திரு, எஸ். ஜே, வி. செல்வநாயகம் தெரிவித்ததாகவும். அவருடையக்கருத்தை எழுத்தில் பதிவுசெய்து கொள்வதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்

TELE Grams: ROHINI
Phone: 296
ESTD: 1929

**S. R. S.** **C. W. E.**
ஜவுளி மாளிகையில் ஜவுளிகள்
**23 - 11 - 66**
புதன் கிழமை தொடக்கம்
ஜவுளி வர்த்தகர்கள் C. W. E. ஜவுளிகளை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
**எஸ். ஆர். செல்லத்துரை**
C. W. E அங்கீகாரம் பெற்ற
மொத்த சில்லறை விற்பனையாளர்.
216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

சேல்ஸ் மனேஜர்...
சிவசக்தி இன்டஸ்றீஸ் சோப் தொழிற்சாலைக்கு சேல்ஸ் மனேஜர் தேவை. பிணைப்பணம் ரூபா 500/- லேசுக் சுற்றுவதற்கு பெண்களும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். சிவசக்தி இன்டஸ்றீஸ், சோப் தொழிற்சாலை, நவற்கிரி வீதி, அச்சுவேலி. 2002


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ்.எஸ். ஆர் - விஜயகுமாரி
நடித்த
**முத்துமண்டபம்**

**நியூ காலிங்கஸ்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
பாரத்பூஷன் - நிம்மி
நடித்த
**அங்குலிமாலா**
(சிங்களம்)

**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண
விஜயமும் காண்பிக்கப்படும

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**காத்தவராயன்**


## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்;
உயர்ந்த இனக் குஞ்சுகள், நிதானமான விலைகள் இலாபம் என்றால் 100% இலாபம். பத்துக் கோழிகளால் பெறும் வருமானத்தை ஒரு கோழி உங்களுக்குக்கொடுக்கும். மேலும் மேலும் உங்களையும் உங்கள் அயலவரையும் ஊக்குவிக்கும். எம்மிடம் மருந்துகளும் பெற்றுக் கொள்ளலாம். ஆ.......... ஏஜெனிசீஸ், அளவெட்டி. 1492

## சேவை

குஞ்சம் கட்டுதல்:
சேலைக்குக்குஞ்சம்கட்ட 50 சதம். விரும்பிய கூலிக்கு ஏற்ப கரைச் சேலைக்கு பூவேலை செய்து கொடுக்கலாம் V. மார்க்கண்டு, புங்குடுதீவு. 2001

## வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, ரேந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் கர்பூர ஜனந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

REGAL—JAFFNA
NOW SHOWING
James Garner
Elke Sommer
in
THE ART OF LOVE


# "அரசாங்க இலாகாக்களில் பாகுபாடு நீங்கவேண்டும்"

## (பீகிங்) கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்.
சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினரின் சத்தியாக்கிரக இயக்கம் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (சீனச்சார்பு) யாழ். பிரதேச கிளை விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-
சிறுபான்மைத்தமிழர் ஐக்கியமுன்னணி தனது போராட்டத்தை பின் போட்டுவிட்டது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் "மூன்று மாதங்களுக்கிடையில் இந்த ஆலயங்களை திறந்துவிட ஆணைசெய்வேன்" என்ற வாக்குறுதியே காரணம் என்றுகூறப்படுகிறது.

ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி அமைப்பை நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களை மாற்றியமைக்க நடைபெறும் விட்டுக்கொடுக்காத, காட்டிக்கொடுக்காத போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத் தலைமையில் அணி திரளவேண்டும். இது தொடர்ச்சியான நீண்ட நாள் போராட்டமாகும். இதற்குத் தியாகம் நிறைந்த, எதற்கும் அஞ்சாத மக்கள் இயக்கத்தைக் கட்டி வளர்க்கவேண்டும். ஆலயங்களைத் திறந்துவிட மூன்றுமாத அவகாசம் கேட்டுள்ள யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிப்போம். அதே நேரத்தில் அரசாங்க மானியம்பெறும் ஸ்தாபனங்களிலும், அரசாங்கக் காரியாலயங்களிலும் சாதிப் பாகுபாடு காட்டுவதையும், தாழ்த்தப்பட்ட மக்களைக் கேளாக்கேள்விகள் கேட்டு அவமானப்படுத்துவதையும், துன்பப்படுத்துவதையும் நீக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம். அதிலும் பொலிஸ் இலாகா முதன்மையானது: குற்றங்களைத் தடுக்கவேண்டியவர்கள் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக இயற்றிவரும் குற்றங்களை விசாரணை செய்தால் அதுவே சாதியமைப்பின் பாதுகாவலர்களாகப் பொலிஸார் நடந்துகொள்கிறார்கள் என்ற உண்மையை எடுத்துக்கூறும். இவற்றில் அரசாங்க அதிபர் கவனமெடுத்து நீக்க முயற்சித்தால் சிறுபான்மைத் தமிழரின் ஏகோபித்த பாராட்டுதலுக்கும் உள்ளாவார்.

உடனடியாக ஆலயங்கள், தேநீர்க்கடைகள், அரசாங்கமானியம் பெறும் நிறுவனங்களிலும் சமத்துவ ஜனநாயக உரிமைகளுக்காக நாம் இயக்கத்தை விஸ்தரிப்போம். ஆனால் இதன்மூலம் சாதியமைப்பு ஒழிந்துவிடப் போவதில்லை. ஆகவே இறுதியாக ஒரு சமுதாய மாற்றத்தை நோக்கிச் செல்வதன்மூலம்தான் சாதியமைப்பைத் தகர்த்தெறிந்து புதிய ஜனநாயக அமைப்பைத் தோற்றுவிப்பதற்கான போராட்டத்தின்மூலமாகவே தீர்வுகாணவேண்டும்.

# 'பல பிரச்னைகளுக்கும் ஜனப்பெருக்கமே காரணம்"

## சிறுவர் தின விழாவில் மாஜிஸ்திரேட்

குரும்பசிட்டி, திங்கள்
"ஆத்மீகத் துறையில் சிறுவர் முன்னேற்றமடைய, வளர்ந்தோர் சிறந்த எடுத்துக்காட்டாக தமது வாழ்க்கையை நடத்த வேண்டும். எமது பகுதிகளில் பாடசாலைகள் மத வழிபாட்டு ஸ்தலங்கள் அதிகமாகக்காணப்படுவதால் பிள்ளைகளின் சூழல் சிறந்த நிலையில் இருக்கின்றது. இதனால் கட்டுப்பாட்டுடன் வாழச்சிறுவர் முற்படுகின்றனர்." என்று ஏழாலை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற உலக சிறுவர் தின விழாவில் மல்லாகம் நீதிபதி திரு டி. எஸ். நெத்தசிங்கா பேசுகையில் கூறினார். காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. நெத்தசிங்கா மேலும் பேசுகையில் கூறியதாவது: ஜனப் பெருக்கம் இன்று நாடு முழுவதிலும் பெரும் பிரச்னையைக் கொடுக்கின்றது. இதனால் பொருளாதார நெருக்கடியும் உண்டாகின்றது. தீய செயல்கள் அதிகரிக்கின்றன. விஞ்ஞான அறிவு வளர்ச்சியினால் ஆத்மீக ஒழுக்கவழிகளை மறந்து கட்டுப்பாடுகளை மீறி மிருகத்தனமான செயல்கள் அதிகரிக்கின்றன. மிருகத்தனம் நிலவும் போது பலவீனமான சிறுவர் சக்திகள் பெரிதும் தாக்கப்படுகின்றன. சிறுவர் பட்டினி, தாக்குதல் போன்றவற்றால் பாதிப்படைகின்றனர். சிலர் பெற்றோர்களை விட்டுப்பிரிந்து வெளியாரின் தயவில் வாழ முற்படுகின்றனர். "சிறுவர்களை இம்சித்தல், புறக்கணித்தல், வயது குறைந்தவரிடம் வேலைவாங்குதல் போன்ற துர்நடத்தைகளை பொலிஸாரின் உதவியுடன் ஒழித்தல்வேண்டும்.




## கொழும்பு

செவ்வாய் 22 - 11 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 ஞதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 தேசிய இசை

844 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.
இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 இராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 7-15 ............ யுனெஸ்கோ உரைச் சித்திரம், 7-30 குதூகலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 ..................... 10-00 கோவையொன்றைப் ...... தேயர் ...............ம்.

## பாடசாலையில் களவு

புங்குடுதீவு, திங்.
ஊரெழு ஸ்ரீகணேச வித்தியாசாலையில் ஒரு மணிக்கூடு, மண்வெட்டி ஆகியவைகள் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

# விளம்பரம்

## கேள்விப்பத்திரம்

பின்வரும் பொருட்களுக்கான கேள்விப் பத்திரங்கள் புத்தூர் கிளாஸ்தாபனத்துக்கு கோரப்படுகின்றன.
2", 3/4", 1/2" சல்லி.
(இரஷரும், உடைசல்லியும்)
செம்பாட்டு மண்
கந்தாவளை மணல்
ஆற்று மண்
மண்கும்பான் மணல்
இப்பொருட்களுக்கான விகிதம் ஒரு கியூப்புக்குள் இருக்கவேண்டும்.
இவற்றுக்கான விண்ணப்பங்களை 30-11-66க்கிடையில் தலைவர், வலி. கிழக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், நீர்வேலி என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

தலைவர்,
வலி, கிழக்கு, ப. நோ. கூ.
சங்கங்களின் சமாசம்
1397 நீர்வேலி.

## முகாமையாளர் தேவை

நவாலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு குறைந்தது J. S. C. தராதரமுடையவரும், கூட்டுறவுக்கலாசாலைப் பயிற்சியில் சித்திபெற்றவருமான ஒரு முகாமையாளர் தேவைப்படுகின்றார்.
பிணைப்பணம்:
காசு ரூபா 1000/-
காணிப்பிணை:
ரூபா 3000/-
மாதவேதனம் எல்லாப் படிகளுமுட்பட ரூபா 125/-
ஒரு விற்பனையாளரையும், முகாமைக்காரரே பிரத்தியேகமாக மாதவேதனம் ரூபா 50/- சங்கங்கொடுக்க அமர்த்தவேண்டும்.
விண்ணப்பங்கள் தலைவருக்கு 28—11—66க்குமுன் பதிவுத் தபாலில் அனுப்பப்படல்வேண்டும்.

தலைவர்
நவாலி
ப. நோ. கூ. ச. (ம. ப.)
மானிப்பாய்.
நவாலி
1—11—66. 1396

## ஏலவிற்பனவு

3923 உபர்ரகமான கூட்டுறவு 2 அவுன்ஸ் தேயிலைப் பைக்கட்டுகள் 25-11-66 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படும்.
தேயிலையின் தரத்தைப் பார்வையிட விரும்புவோர் மேற்படி சமாசயாழ்ப்பாண சேமிப்புச்சாலையில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.


இங்ஙனம்
ஒப்பம்
காரியதரிசி.
வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்.
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். 1398

## 'வேலைநிறுத்தத்தை தடைசெய்க'

காலி, திங்.
"இலங்கையில் அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் இந்தநாட்டில் வேலைநிறுத்தம் தடை செய்யப் படவேண்டும்"
இவ்வாறு உள்நாட்டு அமைச்சர் திரு. டபிள்யூ. தஹநாயகா பிரமானந்த மகாவித்தியாலயத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.
தொடர்ந்து அவர்பேசுகையில், கல்வி சம்பந்தமான வெள்ளை அறிக்கையில் ஏதும் மாற்றமிருந்தால் பெற்றோர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்விமான்கள் ஆகியோர் கலந்தாலோசிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றுகூறினார்.


**2வது வெற்றி வாரம்!**

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) |
| மொடேர்ண் (பண்டாரவளை) | மொடேர்ண் (பதுளை) | விஜிதா (ஹட்டன்) |



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
# ஆண்டவன் கட்டளை
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சீன ராஜீய உறவுகளை இந்தோனேஷியா துண்டிக்க வேண்டும்"

## பிரபல அரசியல் கட்சி அரசாங்கத்தைக் கோரியுள்ளது

ஜாகர்த்தா, நவ. 21

கம்யூனிஸ்ட் சீனவுடனுன ராஜீய உறவுகளைத் துண்டித்துக்கொள்ளுமாறு இந்தோனேஷிய நாததுல் உலமா கட்சி இந்தோனேஷிய அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

வடக்கு சுமத்திராவில் நேற்று நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் மேற்கண்ட தீர்மானத்தை இக்கட்சி நிறைவேற்றியது.

நாததுல் உலமா கட்சி, இந்தோனேஷியாவில் மிகப்பெரும் அரசியல் கட்சியாகும். இக் கட்சியின் கூட்டம் நேற்று வடக்கு சுமத்திராவில் நடைபெற்றது. பெரும் அரசியல் தலைவர்களையும் மூஸ்லிம் அறிஞர்களையும் இக்கட்சி கொண்டுள்ளது.

கடந்த வருடம் அக்டோபர் மாதத்தில் இந்தோனேஷியாவில் ஏற்பட்ட திடீர் புரட்சிக்குப் பின்னர் கம்யூனிஸ்ட் சீனவின் போக்கு வேறுவிதமாக அமைந்திருக்கிறது. இந்தோனேஷியாவைக் கண்டிப்பதே முக்கிய நோக்கமாகவுள்ளது என்று இக்கட்சி இயற்றியுள்ள தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

சுமத்திராவிலுள்ள சீன (வம்சாவழி) மக்கள் இந்தோனேஷியாவின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு அதன் வழியே செல்ல வேண்டும். இதனை விரும்பாத சீனர்கள் தங்களது தாயகத்துக்கு (சீனவுக்கு) திரும்பிவிட வேண்டுமென்று ஒரு தீர்மானம் கோருகிறது.

## எம்.பி.க்களின் வீடுகளில் பொலிஸார் திடீர் சோதனை?

புதுடில்லி, நவ. 21

இரவு வேளைகளில் தங்களுடைய வீடுகளில் பொலிசார் திடீர் சோதனை நடத்தியதாகவும் துன்புறுத்தியதாகவும் மூன்று எம். பி.க்கள் இந்திய லோகசபை சபாநாயகர் திரு. ஹூக்கும் சிங்கிடம் புகார் செய்துள்ளனர்.

இத்தகவலை பார்லிமெண்டில் தெரிவித்த சபாநாயகர், தங்களுக்குப் பாதுகாப்புத் தருமாறு இந்த எம். பி.க்கள் தம்மிடம் கோரியிருப்பதாகவும் கூறினர்.

இப்புகார்களை உள்துறை மந்திரியிடம் தாம் சமர்ப்பித்திருப்பதாகவும் உடனடியாகத் தகவல் தருமாறு அவரைக் கேட்டிருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

தம்முடையவீடு சோதனையிடப்பட்டதாகவும் தமது மனைவி நிந்திக்கப்பட்டதாகவும் திரு. பி. பி. மவுரியா (குடியரசு) புகார் தெரிவித்திருந்தார்.

பிரிட்டன் - ரொடீஷியா

## தொடர்புகள் துண்டிப்பதை தவிர்க்க புதிய முயற்சிகள்

ஸாலிஸ்பரி, நவ. 21

பிரிட்டன் - ரொடீஷியா உறவுகள் துண்டிப்பதைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு ரொடீஷியா இப்பொழுது புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

"சட்டவிரோத" ரொடீஷியபிரதமர் திரு. அயன் ஸ்மித்துக்கும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட்வில்ஸனுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட முட்டுக்கட்டைகளைத் நீக்கும்பொருட்டு புதியமுயற்சிகள்மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. இம்முயற்சிகளில் பிரதமர் திரு. அயன் ஸ்மித் நேரடியாக இறங்கியுள்ளாராம்.

## லிபியாவில் வாயு

திரிப்போலோ, நவ. 21

அமெரிக்க எண்ணெய் கம்பனி ஒன்று, மத்தியதரைக் கடற் பகுதியில், இயற்கை வாயுவைக் கண்டு பிடித்துள்ளது. இப்பகுதி லிபியாவிலுள்ளது. இவ்வாயு, நிலத்திலிருந்து 1,700 அடி ஆழத்தில், நாளுக்கு 350 லட்சம் கியூபிக் அடியாக வெளிவருகிறது. (பி டி. ஸி.)

## டெலிபோனில் திருவிளையாடல்!

சிட்னி, நவ. 21

இங்குள்ள கடைத்தெருவில் ஆவுஸ்திரேலியர் ஒருவர், தனது காரை நிறுத்தி இருந்தார். யாரோ அதனுடன் மோதி, சிறிய சேதம் விளைவித்து விட்டார். கார் சொந்தக்காரர் தனது காருக்குத் திரும்பி வந்தபோது, காரின் முன் கண்ணாடியிலுள்ள மழைநீர்துடைக்கும் கருவியிடையே ஒரு காகிதத் துண்டு சொருகப்பட்டிருந்ததைக் கண்டார். அதில் 'ஏதாவது நஷ்ட ஈடுவேண்டுமெனில் போன் இலக்கம் 48-0221, க்கு போன் செய்யவும்' என்று எழுதப்பட்டிருந்தது.

அவர் அவ்விதமே அந்த இலக்கத்திற்கு டெலிபோன் செய்தார். அவருக்குப் பின்வரும் பதில் கிடைத்தது. 'டெலிபோன் மூலம்பிரார்த்தனை சேவைக்கு உங்களை நாங்கள் வரவேற்கிறோம். ......'' (பி. டி. ஸி.)

## வைத்திய கல்வி மகாநாடு

புதுடில்லி, நவ. 21

வைத்தியக்கல்வி மூன்றாவது உலக மகாநாடு நேற்று இங்கு ஆரம்பமானது. ... பது நாடுகளைச் சேர்ந்த 700 பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

## விண்வெளியில் தாவர வாழ்க்கை

கனடா, நவ. 21

நூறு ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸின் மீது விழுந்த விண்கல்லொன்றின் நான்கு துண்டுகளை ஆராய்ச்சி செய்வதன்மூலம், விண்வெளியில் தாவரவாழ்க்கை இருப்பதாகத்தம்மால் நிரூபிக்கமுடியுமென இங்குள்ள இரு பெட்ரோலியம் நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பி. டி. ஸி.

## 'தூங்கு தம்பி நீ தூங்கு!'

பர்மிங்காம் (இங்கிலாந்து) நவ. 21

இரவில் படுக்கைக்கு முன்னதாகவே செல்லும் மாணவர்கள்தான் கெட்டிக்காரர்களாக இருப்பதாக இங்கு செய்யப்பட்ட ஆராய்ச்சியின் முடிவாகக் கூறப்பட்டுள்ளது.

திறமை கூடிய மாணவர்கள் திறமை குறைந்த மாணவர்களைவிடச் சராசரி 35 நிமிடங்களுக்கு முன்னதாகவே படுக்கைக்குச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (பி. டி. ஸி.)

## தெருப்பாலங்களை எரித்தனர்

பாங்கொக், நவ. 27

தாய்லாந்தின் வடகிழக்கு மாகாணமான சாக்கோன் நாக்கோனிலுள்ள இரண்டு தெருப்பாலங்களை விஷமிகள் தீயிட்டு அழித்துவிட்டதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (பி. டி. ஸி.)

## நிவாரண உதவி

சென்னை, நவ. 21

சென்னை புயல் நிவாரண உடனடி வேலைகளுக்காகச் சென்னை நகரசபைக்கு அரசாங்கம் 15 லட்சம் ரூபா கொடுக்கவிருக்கிறது.

## கோவா விவகாரம்

புதுடில்லி, நவ. 21

"கோவாவில் அபிப்பிராய வாக்கெடுப்பு ஜனவரி மத்தியில் நடைபெறலாம். வாக்கெடுப்பு பாரபட்சமற்ற முறையில் நடைபெற அதை பிரதம தேர்தல் கமிஷனரின் மேற்பார்வையின் கீழ் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசினரின் நோக்கங்கள் அவசியமெனக் கருதவில்லை. கோவா வாக்கெடுப்பு ஆரம்பமாகுமுன் கோவா அரசாங்கம் ராஜினாமாசெய்துவிடுமென்றும் யூனியன் அரசாங்கம் எதிர்பார்க்கிறது" என்று உள்துறை உதவிமந்திரி திரு. சுக்ளா, ராஜ்யசபையில் தெரிவித்தார்.

ஆந்திர பிரதேசத்தில்

## பொலிஸார் சுட்டதில் 23 பேர் காயம்

விஜயவாடா, நவ. 21

ஆந்திராப் பிரதேசத்திலுள்ள கோலாலம்பூர் எனுமிடத்தில் நேற்று ஆர்ப்பாட்டக்கார கும்பலொன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியதில் மூன்றுபேர் காயமடைந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் வன்முறைச் செயல்களினால் ஒரு உதவி இன்ஸ்பெக்டர் உள்ளிட்டு பதின்மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரின் தடையையும் மீறி ஊர்வலம் நடத்தினரென்றும் கடையொன்றைத் தாக்கினரென்றும் பலதடைகளையும் சூறையாடினரென்றும் இதனைத் தொடர்ந்தே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனசங் தலைவரை விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்தரவு

புதுடில்லி, நவ. 21

டில்லியில் நடைபெற்ற பசுவதை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையொட்டி கைது செய்யப்பட்ட ஜனசங்கத் தலைவர் திரு. பால்ராஜ் மாதோக் மற்றும் எட்டுப் பேர்களும் விடுதலைசெய்யப்பட்டனர்.

எந்தக் குற்றத்தை செய்ய இவர்கள் ஏற்பாடுசெய்தனர் என்று வாக்குமூலத்தில் குறிக்கப்படவில்லை எனவும் இவர்களைக் கைதுசெய்து றிமாண்டில் வைத்திருப்பது சட்டத்திற்கு முரணானது என்றும் கூறி டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ. கே. எஸ். ஹெக்டே, அவர்களை விடுதலைசெய்யும்படி உத்தரவிட்டார்.

## "நிர்வாகம் சீர்குலைவு"

புதுடில்லி, நவ. 21

"மிஸோ மலை ஜில்லாப் பகுதிகளில் நிர்வாகம் சீர்குலைந்திருக்கிறது. மிஸோ கலகக்காரர்கள் பெப்ரவரியில் செய்த ஆயுதக் கலகத்தைத் தொடர்ந்து எழுந்த பிரச்னை சில வாரங்களுக்கு இல்லாவிட்டாலும் சில மாதங்களுக்குள் சிவில் நிர்வாகம் திரும்ப ஏற்பட்டுவிடும். இது கலகக்காரர்களைத் தேடிப்பிடிக்கும் பிரச்னையல்ல. மக்களிடம் நம்பிக்கைவைத்துச் செய்ய வேண்டிய அரசியல்பிரச்னை என்று உள்துறை மந்திரி திரு. சவான் லோக்சபையில் தெரிவித்தார்.

## மதுலிமாயி வெளியேற்றம்

புதுடில்லி, நவ. 21

காமராஜரின் வீட்டுக்குத் தீவைத்து அவரைக் கொலை செய்யும் நோக்கத்துடன் வங்காளத்திலிருந்து 60 முதல் 70 குண்டர்கள் டில்லி வந்தனரென்று டில்லி சட்டசபையில் மதுலிமாயி கூறினார்.

இவர் கூறியபோது சபாநாயகர் அவரைத் தடுத்து "சபை முன்னுள்ள விஷயத்திற்கும், நீங்கள் கூறுவதற்கும் தொடர்பு இல்லை" என்று கூறினார். மதுலிமாயி தொடர்ந்து பேசியதால் அவர் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

## பெரு வெள்ளத்துக்கு பேரெலிகள் பலி!

வெனிஸ், நவ. 21

அண்மையில் ஏற்பட்ட பயங்கர வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள ஒரேயொரு பெரும் நன்மை, வெனிஸ் நகரத்தின் ராக்ஷத எலிகளின் மறைவே என்று வெனிஸ் நகர மக்கள் இங்கு கூறியுள்ளனர்.

அவ்வெலிகளின் பெருப்பத்தைக் கண்டு பூனைகளே பயப்பட்டுப் பின்வாங்கிவிடுமாம். ஆனால் இந்த எலிகள் யாவும் நவம்பர் 4ல் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. (பி. டி. ஸி.)

## மீண்டும் செங்காவலர்!

டோக்கியோ, நவ. 21

பலாத்காரம், கொடூரம் ஆகியவற்றுக்காக பீகிங்கிலுள்ள செங்காவலர் படையினர் கடுமையாகத் தண்டிக்கப்படுவரென எச்சரிக்கப்பட்டுள்ளதாக ஜப்பானிய பத்திரிகை 'மெயினிச்சி' அறிவித்துள்ளது.

பீகிங் நகரில் செங்காவலரை எச்சரிக்கும் சுவரொட்டிகள், கம்யூனிஸ்ட் கட்சியின் பீகிங் கமிட்டியினால் வெளியிடப்பட்டதாக அப்பத்திரிகையின் பீகிங் நிருபர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பிரசாரக் கமிட்டிப் பகுதித் தலைவரான வி-கு-சாங், செங்காவலரினால் 4 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டபின் மரணமாகிய சம்பவத்துக்கும்; இந்த எச்சரிக்கைக்கும் தொடர்பு இருக்கலாமென நம்பப்படுகிறது. (பி. டி. ஸி.)

## பகிஷ்கரிப்பு

பெய்ரூட், நவ. 21

இஸ்ரேலுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதற்காக மேயோரிட் மோட்டார் கம்பனியும், கொக்கோ கோலா பானமும் அராபிய நாடுகளில் பகிஷ்கரிக்கப்படுமென இங்கு குவெயித்தில் கூடிய மகாநாடொன்றில் தீர்மானிக்கப்பட்டது. (பி. டி. ஸி.)

## அரசாங்க ஊழியருக்கு கடனுதவி

கொழும்பு, திங்கள்

வெள்ளத்தினாலும்மற்றும் சாதாரணமான தேவைகளினாலும் கஷ்டப்படும் அரசாங்க ஊழியர்களுக்குகஷ்ட நிவாரண கடன் கொடுக்கலாமென்று திறைசேரி முடிவு செய்துள்ளது.

அண்மையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு மூன்றுமாத அடிப்படைச் சம்பளம் வழங்கும்படி அரசாங்க இலாகா தலைவர்களுக்கும் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் திறைசேரி அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

நமது மனதை சுத்தமாக வைத்துக்கொள்ள சுலபமான வழி என்னதெரியுமா? நமது இருதயத்துக்குள்ளே இருக்கும் மிக மிக பரிசுத்தமான சத்யப்பொருளைப்பற்றி நினைத்து அதை தியானிப்பதுதான்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box [illegible]

Telegrams: EELANADU Jaffna Telephone [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு கார்த்திகை மீ 7 உ (22-11-66)

## மது ஒழிப்பு

மதுபோதையில் இருந்ததால் தனக்கு அருகில் தனது செல்வக் குழந்தை தீப்பிடித்துஎரிந்துகொண்டிருந்ததைக் கூட உணர்ந்துகொள்ளமுடியாத நிலை ஒரு தந்தைக்கு ஏற்பட்டிருக்கிறது. மதுமயக்கத்தினால் குழந்தையை இழந்துவிட்ட துர்ப்பாக்கிய நிலை பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒரு தந்தைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பரிதாப நிலை வேறு எவருக்குமே ஏற்படக்கூடாது.

ஒரு குழந்தையின் உயிர் அகாலமாகப் பிரிந்ததால்தான் பண்டத்தரிப்புச் சம்பவம் வெளியே வந்தது.

இதுபோன்று வீட்டு விபத்துக்களும், வெளியே வீதி விபத்துக்களும் மட்டும் மதுபோதையால் ஏற்படுவதொருபுறமிருக்க மதுவினால் நடைப்பிணமாகத் திரிபவர் பலர். மானம் மரியாதை இழந்து, கடனாளிகளாக குடும்பத்தைக்காப்பாற்ற முடியாது தற்கொலை செய்துகொள்பவர்களைப் பற்றிய செய்திகளும் இங்கு சாதாரணம். மது மனிதனுக்குக் கெடுதி தரும் பானமென்பது தெரிந்தும் பழக்கத்தை மாற்றமுடியாமல் அவதிப்படுபவர்கள் பலர். மது பானம் தடையின்றித் தாராளமாகக் கிடைக்கக்கூடியதாக இருப்பதால் அதற்குச் சுலபமாக அடிமையாகக்கூடிய வாய்ப்பு மற்றவர்களுக்கும் ஏற்படுகிறது.

பஞ்சமாபாதகங்களில் குடியும் ஒன்று. எந்த மதமும் பஞ்சமா பாதகங்களில் எந்த ஒரு பாவத்தையும் மனிதன் செய்ய வேண்டுமென்று கூறவில்லை. இங்கு பௌத்த மதத்துக்குரிய அந்தஸ்து கொடுக்கவேண்டுமென்று கூறுவோரும், பௌத்தம் இலங்கையில் முதன்மை பெற்று விளங்குகிறதென்பது 'போயா' தினங்களை விடுமுறை தினங்களாக்கியதன் மூலம் தெளிவாகிவிட்டதென்று கூறுவோரும் பௌத்தம் மது போதையை ஆதரிக்கவில்லையென்பதை உணரவில்லையா? இதேபோல் இந்துசமூகத்தின் குறைகளை நீக்கவேண்டுமென விரும்புவோர் மது பானத்தை ஒழிக்கவும் முன்வரவேண்டும். யாழ்ப்பாணத்தில் மரவரிமுறை பலதீமைகளுக்குக்காரணமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. மரவரிமுறை மட்டுமல்ல, தவறணை முறையும் கூட தீங்கானதே.

இலங்கையில் மதுவை ஒழிக்கவேண்டிய அவசியத்தை இனியும் உணராதிருக்கமுடியாது இங்கு குற்றச்செயல்கள் அதிகரித்துவருவதற்கு மது முக்கிய காரணம். மதுவை ஒழித்தால் நாட்டின் வருமானம் பாதிக்கப்படுமென்று கூறுவது நியாயமாகாது. வருமானத்துக்காக தீய செயல்களை அனுமதிக்க முடியுமா? மது ஒழிப்புப் பிரசாரத்தில் சமய, சமூகத் தலைவர்கள் ஈடுபட முன்வரவேண்டும். அதே சமயம் அரசாங்கமும் மதுஒழிப்புக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மது ஒழிப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பிரதமர் டட்லி இவ் விஷயத்தில் கவனம்செலுத்தாமலிருக்கமுடியாது.

## ஐக்கியமும் பொருளாதாரமும்

நாடுமுன்னேறவேண்டுமானால் சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் என்ற பாகுபாடு எதுவுமின்றி தேசிய ஐக்கியம் நிலவவேண்டுமென்றும், ஐக்கியம் நிலவினால்தான் பொருளாதாரத் துறையில் அபிவிருத்தியடைய முடியுமென்றும் பிரதமர் திரு. டட்லிசேனநாயகா குருநாகலையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சரியாகச் சுட்டிக்காட்டினார். இதே சமயம் யாழ்ப்பாணத்தில் , சில வைபவங்களில் கலந்துகொண்ட திரு. வில்மட் பெரேரா, இதர பிரச்னைகளை சிறிது மறந்துவிட்டு இந்நாட்டு மக்களனைவரும் பொருளாதார விருத்திக்காக உழைக்கவேண்டுமென்றும் இல்லையேல் நாட்டுக்குப் பெரும கஷ்டமேற்படுமென்றும் எடுத்துக் கூறியிருக்கிறார். வட இலங்கை மக்களுக்கும் தென்னிலங்கை மக்களுக்கும் இரு பெரும் தலைவர்கள் ஒரே சமயத்தில் நாட்டின் பொருளாதார நிலை மோசமடைந்திருப்பதையும், இதைச் சமாளிக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் காட்டி உணர்த்தியிருக்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாது பதவியையும் அதிகார ஆசையையும் கருத்திற்கொண்டு பல ஆண்டுகளாக சிலர் நடந்துகொண்டதன் விளைவு இன்று வாழ்க்கைச்செலவு உயர்வுச் சுமையைத் தாங்க முடியாமல்மக்கள் அவதிப்படும்அவல நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது. தேசிய ஒற்றுமை இல்லையெனில் நாடு பொருளாதாரத்தில் முன்னேற முடியாது. இதுகடந்த கால அனுபவங்களை உணர்த்தியுள்ளது. பொருளாதார விருத்தியில்லையேல் இங்கு ஜனநாயகம் நிலைபெற முடியாது. கஷ்டமின்றிப் பெற்ற சுதந்திரமும் நிலைக்கமுடியாது

தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டி, பொருளாதாரத்தை விருத்தி செய்து ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் காப்பாற்ற இலங்கை மக்கள் அனைவரும் முன்வரவேண்டும். இதற்குத் தலைவர்கள்வழி காட்டவேண்டும். இவ் விஷயத்தில் திரு. வில்மட் பெரேரா போன்றவர்கள் வழிகாட்டலாம்.

# பிரபஞ்சத்தின் இரகசியங்களை ஆராய ஒரு செய்மதி

பிரபஞ்சம் எல்லையற்றது. ஒரு புதிரான, விசாலமான மனித அறிவால் கிரகிக்கமுடியாத, எல்லையற்ற உலகம்தான் பிரபஞ்சம். இந்த விநோத பிரபஞ்சத்தின் இரகசியங்களை அலசும் மனித முயற்சியாக 1971-ம் ஆண்டு ஓர் உலக முக்கியத்துவம் வாய்ந்த விண்வெளி ஆராய்ச்சி ஒன்று நடைபெறவிருக்கிறது.

ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி சபை 1971-ம் ஆண்டில் ஒரு பிரமாண்டமான செயற்கை கிரகத்தை விண்வெளிக்கு அனுப்ப இருக்கிறது. இந்தச் செய்மதி 400 மைல் உயரத்திலிருந்து பூமியை வலம் வந்துகொண்டிருக்கும். ஒரு வருட காலத்திற்கு இது விண்வெளியில் தங்கி நின்று ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்.

இந்தச் செய்மதி இதற்கு முன் விண்வெளியில் அனுப்பப்பட்ட செய்மதிகள் போன்றதல்ல. இந்தச் செய்மதியில் ராட்சத தொலை நோக்கிக் கருவி ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். பிரபஞ்சத்திலுள்ள நட்சத்திர ஒளிவண்ணப்படை, விண்ணுலக வஸ்துக்கள், நட்சத்திரக்குழாம், விண்வெளிப்பால் மண்டலம் ஆகியனவற்றை இச்செய்மதி நன்கு நுணுக்கமாக ஆராய்ந்து பூமிக்குத் தகவல் அனுப்பிவரும்.

வளிமண்டல தாக்கங்கள் காரணமாக பூமியிலிருந்து அண்டவெளி இரகசியங்களை துலக்குவதென்பது சிரமம் தான். வானசாஸ்திரிகள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வந்த பிரச்னை இது. ஆனால், ராட்சத தொலைநோக்கியைக்கொண்ட இந்தச் செய்மதியோ பூமியில் வளிமண்டல ஈர்ப்புப் படுக்கைகளுக்கு அப்பால் வெகுதூரம் அனுப்பப்படுகிறது. எனவே இச்செய்மதி மூலம் பூமிக்கு தகவலை சேர்ப்பது ஒரு பிரச்னையாக இராது.

வளிமண்டலத் தாக்கங்கள் இல்லாதிருப்பதால் இப்புதிய விண்வெளிக்கோளம் இதுவரை மனிதரால் கண்டுபிடிக்கப்படாத நட்சத்திர ஒளிவண்ணப்படையின் ஊடுகதிர் சுருதிகளை ஆராய முடியுமென விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

### விஞ்ஞான ஆய்வுகூடம்

இந்தப் புதிய செயற்கைக் கிரகம் ஒரு விஞ்ஞான ஆய்வுகூடமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் நுட்பம் மிகுந்த ராட்சத தொலைநோக்கி ஒன்றுடன் மற்றும் பல உபகரணங்கள் இணைக்கப்பட்டிருக்கும். இதில் பொருத்தப்பட்டிருக்கும் தொலைநோக்கி 10 அடி நீளமும், 30 அங்குல அகலமும் உள்ளது.

அந்த செய்மதியின் தொலைநோக்கிக் கருவியையும் மற்றும் சாதனங்களையும் ஐரோப்பிய ஆராய்ச்சி சபையின் அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானிகள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். (பிரிட்டன், பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து ஆகியவையே இந்த அங்கத்துவ நாடுகளாகும்) தொலைநோக்கிக் கருவியின் அமைப்பைப் பொறுத்தவரை இந்த நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பிரிட்டிஷ் அமைப்பிற்கே முதலிடம் கொடுத்தன. பிரிட்டிஷ் அணுசக்தி நிலையத்தைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானியாகிய டாக்டர் ஆர். வில்சனின் தலைமையிலுள்ள குழு ஒன்றே இந்த அமைப்பை தயாரித்ததென்பது குறிப்பிடத்தக்கது.

# ஐயாறன் எழுதுவது

மலைமீது முருகன் கோயில்கள் பல இருக்கலாம். ஆனால் குன்றுதோறாடும் குமரனுக்குக் கோயில் கட்ட பல்கலைக்கழக மாணவர்களும், ஆசிரியர்களும் உலகில் எங்காவது மண்வெட்டி பிடித்து, அத்திபாரம் தோண்டி, திருப்பணி செய்ததுண்டா?

நமது பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றிப் பல பல கூடாத செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகின்றன. கீழ்த்தரமான "ராக்கிங்" செய்வதாகவும் குடிப்பதாகவும் இப்பத்தியிலே பன்முறை கண்டித்திருக்கிறேன். ஆனால் அவ் இளம் சிங்கங்கள், பேராதனையிலே ஒர் உன்னதமான குன்றின்மீது முருகனுக்குக் கோயில் கட்ட உடலுழைப்பால் திருப்பணி நடத்தியுள்ள முக்கியமான செய்தியைக் கேட்டதும், அந்த இடத்தைப் பார்க்கவேண்டுமென்று மிக ஆவலாக இருந்தது.

சென்ற வாரம் கண்டிக்குச் சென்றபோது, ஒரவர் அந்த இடத்துக்கு என்னை அழைத்துச் சென்று காட்டினார். கிறிஸ்தவர்களுக்காக இரு கோயில்கள் அழகாகக் கட்டப்பட்டுள்ளன. பௌத்த மாணவர்களுக்கான 'டகோபா' சற்று உயரத்தில் காட்சியளிக்கின்றது. திறந்தவெளியில் தான் மாணவ மாணவிகள் வழிபடவேண்டும். அதற்கு மேல் ஓரிடத்தில் கருங்கற்கள் குவிந்துள்ளன. இஸ்லாமிய மசூதி கட்டுவதற்காக மும்முரமான ஏற்பாடுகள் நடக்கின்றன.

இவற்றைத் தொடர்ந்து உயரிய மலைமீது முருகன் கோயிலுக்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இவ்வளவுதூரம் நடந்து மலை ஏறிவருவது கஷ்டம் தான். காரில் செல்ல ரோடு பாதையிருப்பினும், இந்து மாணவர் பலரும் நடந்து தான் வரவேண்டியிருக்கும். என்றாலும் பழநி முதலிய இடங்களில் மலை ஏறி முடிகளைத் தரிசிக்கிறோமல்லவா? உடலுக்குச் சற்றே சிரமமாக இருப்பினும் உள்ளத்துக்கு அந்தப் பாதயாத்திரை எவ்வளவு நன்மை செய்கிறது! அதுபோல் தான் பேராதனை முருகன் கோயிலும் திருவருளால் உன்னதமான இடத்தில் அமைகின்றதென்பதை உணர்ந்தேன்.

ஃ ஃ ஃ

[illegible]

கோபுரமும் கட்டிவிட்டால், பல்கலைக்கழகத்திலே எங்கிருந்தாலும் 'ஸ்தூல லிங்கம்' எனப்படும் கோபுரத்தை எங்கிருந்தும் மாணவர்கள் பார்த்து ஆலய தரிசனம்செய்து மனத்தூய்மையாகிற பலனைப் பெறலாம். இந்துக்கோயிலுக்கு எங்கோ தூரத்தில் இடம் ஒதுக்கியிருக்கிறார்களோ என்று நினைத்திருந்தேன். நேரில் பார்த்ததும் மனதுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

உச்சியிலே கர்ப்பக்கிரகத்துக்காக பாறையை வெட்டியுள்ளதைக் கண்டேன். சுற்றி அதிக பரப்புக்கு நிலத்தை டிராக்டர்களைக் கொண்டு சமமாக்கியிருக்கிறார்கள். இவ்வாரம் ஒரு தர்மவானைக்கொண்டு அஸ்திவாரம் நாட்டப்போவதாயும், பக்திச் சூழ்நிலையில் ஆடம்பரமில்லாமல் இவ் வைபவம் நடத்தப்போவ

(5-ம் பக்கம் பார்க்க)

# -தீட்டு, தீண்டுதல் தீண்டாமை-

(க. வை. ஆ. சர்மா)

சைவசமய ஒழுக்க நெறியில் உள்ளபல அடிப்படையான கொள்கைகளை, அவற்றின் காரணகாரியத் தொடர்பை மக்கள் அறியாதிருந்தபோதும், அப்படியே ஏற்று ஒழுகி வந்தனர். இப்போதும் ஒரு சிலர் தவிர ஏனையோர் பலர் கடைப்பிடித்து வருகின்றனர். எதிர்காலம் எப்படியோ? இது என்ன? எப்படி? ஏன்? என ஒவ்வொரு துறை பற்றியும் ஆராய்ந்து பார்க்கும் மனப்பான்மை மக்களிடத்தே விரிவடைந்து வருகின்றது. அவ்வாராய்ச்சியில் தம்மனம் ஒப்பக்கூடிய தகுந்த விடை கிடையாதபோது விரிந்தமனப்பாங்குடையவர் விஷயத்தை மேலும் விசாரித்து அறிய முயலுவர். ஒடுங்கிய புத்தியுடையவர் திரிபுணர்ச்சி கொண்டு தாம் கண்ட முடிவே சரியானதுஎன்றும், தமதுமுன்னோர் மூடநம்பிக்கையால் - குருட்டு நம்பிக்கையால் அவற்றைக்கைக்கொண்டார்கள் என்றும் எள்ளிநகையாடுவர்.

முதலில் தீட்டுஎன்பதுபற்றி ஆராய்வாம்.

தீட்டு என்றசொல்லுக்கு அழுக்கு, ஆசௌசம், எழுதுதல், கூர்மையாக்குதல், சூதகம் மகளிர் மாதவிடாய், எனப்பலபொருள்கள்உண்டு எழுதுதல், கூர்மையாக்குதல் என்பன தவிர ஏனையபொருள்களில் தீட்டு என்பது ஒழுக்க நெறியோடு ஒட்டி எவ்வாறு அமையும் எனப் பார்ப்போம்.

அழுக்கு உடல்பற்றியதாகவும், உளம் பற்றியதாகவும் இருவகைப்படும். உடல்பற்றிய அழுக்கு ஒரளவுக்கு புறக்கண்ணால் காணக்கூடியது. இலகுவாகநீக்கக் கூடியது. உளம் பற்றிய அழுக்கானது உட்பகை எனப்படும். ஆறும், அவை:- காமம் குரோதம், உலோபம் மோகம், மதம், மாற்சரியம் என்பன.

இவ்வாறையும் மூன்றினுளடக்கிக் காமம், வெகுளி, மயக்கம் எனவும் கூறுவர். காமம் என்பது பெருந்தாக்காதல். காமம் தீயது. காதல் தூயது. மனம் போன போக்கில் அனுபவிக்கவிரும்புதல் காமம். இதுமிக்குபொற் இழிவானதவரலாற்றில் இறையனார் வாழுவபாடலில்-

''கொங்குதேர் வாழ்க்கை
அஞ்சிறைத்தும்பி!
காமஞ்செப்பாது கண்டது
மொழிமோ''

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிளகாய்ச் செய்கையில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவர்

## சுற்றறிக்கை விரைவில் வெளியாகும்

வல்வெட்டித்துறை, திங்

மிளகாய்ப்பயிர்ச்செய்கையில் மாணவர்களை ஈடுபடுத்தும் திட்டமொன்று ஓரிரு வாரங்களில் பாடசாலைகளில் ஆரம்பித்து வைக்கப் படவிருக்கிறது. இது சம்பந்தமான சுற்றுநிருபம் கல்வி அதிகாரிகளினால் பாடசாலைகளுக்கு விரைவில் அனுப்பப்படவிருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட இணைப்புக் குழுகூட்டத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் தெரிவித்திருந்த யோசனைகளைத் தொடர்ந்தே இத்திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது.

யாழ். மாவட்டப் பகுதிகளில் மிளகாய்ச் செய்கையைப் பெருக்குவதற்கு அரசாங்கம் உதவியளிக்கவேண்டுமென்றும் சாதாரணமாக ஒரு விவசாயி ஆயிரம் மிளகாய்க் கன்றுகளையே நாட்டி வருவதாகவும் அவ்விவசாயிக்கு அரசாங்கம் உதவி அளிப்பதன்மூலம் மேலும் அதிககன்றுகளை நாட்டச் செய்யமுடியுமென்றும் திரு. கே. துரைரத்தினம்கூறியிருந்தார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளிலுள்ள சுமார் ஒரு லட்சம் மாணவர்கள் இப்பொழுது வயல்களில் களை பிடுங்குதலை ஒரு பாடமாக மேற்கொள்வதுபோல மிளகாய்ச்செடி அபிவிருத்தியிலும் பாடசாலை தவணையொன்றுக்கு ஐந்துநாட்களை மாணவர்களை ஈடுபடச்செய்ய வேண்டுமெனவும் இதனால் யாழ் மாவட்டத்தில் தற்பொழுது பயிரிட்டுவரும் மிளகாய்ச் செய்கையை 2000ஏக்கர் நிலத்திலிருந்து 4000 ஏக்கர்நிலத்துக்கு அதிகரித்து அதன்மூலம் வருடமொன்றுக்கு 30 லட்சம் ரூபா வருமானத்தை பெற்றுக்கொள்ளலாமெனவும் அவர் அக்கூட்டத்தில் விளக்கிக்கூறினார்.

'இப்பகுதி மாணவர்கள் வயல்களில் களைபிடுங்குதலை விவசாயிகள் ஏற்றுக்கொள்வதுபோல மிளகாய்ச்செய்கை அபிவிருத்திக்கும் மாணவர்கள் தங்களுக்கு உதவியளிப்பதை விவசாயிகள் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றனர். பருத்தித்துறைப் பகுதிக்கு விஜயம்செய்த விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா மிளகாய்ச்செய்கைமூலம் அபிவிருத்தியைப் பெருக்கி அதிக வருமானத்தை யாழ்ப்பாணத்தவர் பெறமுடியுமென்றுகூறியிருந்தார். மிளகாய் செய்கை அபிவிருத்திக்கு காலத்துக்கேற்ற கூலியாட்களைப்பெறமுடியாத காரணத்தால் இச்செய்கையாதிக்கப்பட்டுள்ளது' என்றும் திரு கே. துரைரத்தினம் தெரிவித்திருந்தார்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட எம். பிக்கள் பலரும் கல்விஅதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# "வீட்டிலிருக்கையில் நான் தாலிக்கொடி கட்டுவதில்லை"

## திருட்டு வழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், திங்கள்

"நான் வீட்டில் இருக்கும் பொழுது தாலிக்கொடி கட்டுவதில்லை, வீட்டில் சங்கிலி தான் கட்டுவேன். வெளியில் போகும் பொழுதுமட்டும் தாலிக்கொடியை கட்டுவேன்." தமக்கை, தங்கையின் 500 ரூபா பெறுமதியான சங்கிலியை கொள்ளையடித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளித்த தங்கை பூரணம் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்காவிடம் கூறினார்.

இவ்வழக்கில் மயிலிட்டி வடக்கைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை தங்கரட்ணம் என்பவர் தனது இளைய சகோதரியாகிய சின்னமணி பூரணத்தின் 500 ரூபாய் பெறுமதியான சங்கிலியைக் கொள்ளையடித்ததாகவும் காயம் விளைவித்தாகவும் காங்கேசன்துறைப் பொலிஸாரால்குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிர்தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். காங்கேசன்துறை பொலிஸ்இன்ஸ்பெக்டர்திரு பி. இராமநாதனின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ரி. தம்பிரத்தினம் வழக்கை நடத்தினார்.

நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில், இச்சம்பவம் உண்மையில் நடைபெற்றுள்ளது என்பதைத்தான் நம்புவதாகவும் ஆனால்சாட்சியங்களுக்கிடையில் முரண்பாடு காணப்படுவதால் எதிரியை விடுதலை செய்வதாகவும் கூறினார்.

காவி, இலாவி அரசாங்கஉதவி அதிபர் திரு சரத் அமுனுகம டிசம்பர்மாதம் தொடக்கம் கண்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## தீட்டு, தீண்டுதல்...:

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவருவது காணலாம். அதாவது- ஓ தம்பியே! நீ மனம் போனவழி செல்லாமல் நேரே அனுபவித்துக் கண்டுஅறிந்ததைச் சொல்லுவாயாக என்பது.

இனி ஒருதலைனும் தலைவியும் விதிகூட்ட ஒன்றுகூடி தூயமனத்தினால் பற்றுக் கொள்ளுவதுகாதல்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பதும்" என்பது தேவாரம் இங்கே நன்னெறிஎன்றதுஉண்மையான முத்திநிலை. ஆன்மாவான நாயகியும், பரமான்மாவாகிய நாயகனும் ஒன்றுகூடும் உத்தம நெறியே காதல் எனப்பட்டது. காமப்பிடியினுள் அகப்பட்ட மனம் ஒருபோதும் தூயதாகாது. ஆகவே அது அழுக்கு. இதனால் காமவயப்பட்டவர் தீட்டு உடையவர் ஆவர்.

குரோதம்என்பதுகோபம் அது வெகுளி என்று தனித்தமிழில் சொல்லப்படும். கோபமே பாவத்துக்கு காரணம்.

'அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா வியன்றது அறம்' என்று அறத்துக்கு இலக்கணம் வகுத்தார் வள்ளுவப் பெருந்தகையார். அறத்தின் வழி ஒழுகும்எவரும் கோபம் கொள்ளுதல் ஆகாது. கோபம் வந்தவுடனே இரத்தக்கொதிப்புஉண்டாகிறது. செய்வது இன்னது எனத் தெரியாது மனம்குழம்புகிறது; புத்தி ஆராமைமறுக்கிறது; சித்தம் தெளிவாது கலங்குகிறது; அகங்காரம் என்ற இறுமாப்புத்தலைக் கொண்டு செய்யத்தகாததைச் செய்துவிடுகிறது. உலகம்நடுங்கும்படி அருந்தவஞ் செய்து பேராற்றல்வாய்ந்த முனிவரான விசுவாமித்திரனே தான்கொண்ட வெகுளியினால் தன்தவத்திற்பாதியைஇழந்தான் என்றால் வெகுளியை அழுக்கு என்பதில் தவறு யாதுமில்லை.

தருமநெறி தவறாது வாழ விரும்பும் எவரும் தமக்குத் தீங்கு செய்தாரிடத்தும் சினங்கொள்ளாது, வெகுவியை அடக்கிப் பொறுமையைமேற்கொள்ளமுயலுதல் வேண்டும். ஆயினும், சிவாபராதஞ்செய்தாரை ஒறுத்துத்தடுக்காதிருத்தல் சினங்கொள்வதினும் மேலான பாவமாகும்.

மூன்றாவதாகத் தீண்டலினைக்குக் அழுக்கு மயக்கம் எனப்படும். அது உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என நான்காக விரிவடையும்.

உலோபமாவது ஆன்மாக்கள் அனுபவிக்கும்படி இறைவனால்தரப்பட்ட தனு கரண புவன போகங்கள் அனைவருக்கும் பொது என்பதை மறந்து ஒருவன்தானும் தன்னைச்சேர்ந்தவரும்மாத்திரம் அனுபவித்துச் சுகமாக வாழநினைத்தலாம். அது வேகொடுத்துவாழவிரும்பாமைமையாகும். அந்த நினைவு ஒருவனிடத்தே எழுமாயின் அது அவனது உள்ளத்தை மாசுபடுத்தித் தூய்மையைக் கெடுத்து அவனைத் தீட்டுடையவனாக்கிவிடும்.

(தொடரும்)

# ஐ. அ. குடியரசுக்கு ருமேனியா அதிபர்

புக்காரெஸ்ட், நவ. 21

ருமேனியாஜனாதிபதி திரு சிவுஸ்செஸ்கோ நேற்று விமானமூலம் செய்ரோவுக்குப்பயணமானார். ஐக்கிய அரபுக்குடியரசின் ஜனாதிபதி நாசரின் அழைப்பை ஏற்று, உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டே அவர்சென்றுள்ளார். அவரது பாரியாரும் கூடவே சென்றுள்ளார்.

(பி. டி. ஐ.)

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயும் அறிந்தேன். பக்திதான்வேண்டும். ஆடம்பரம் ஏன்?

நல்ல காரியங்களுக்கு எதிர்ப்பு இருப்பது சகஜமல்லவா? அதுபோல் இக்கோயில் கட்டுவதற்கும், சிலர் எதிர்ப்பாக உள்ளனராம். ஏன் தெரியுமா? பேராதனைப் பல்கலைக்கழகம் சிங்களமயமாகிவிடுமாம். ஆதலால் இந்தக் கோயிலைக் கட்டக்கூடாதாம்! அட கடவுளே! நாளைக்கு ஏதோ ஆபத்து வரலாமென்று பயந்து இன்றே தற்கொலைசெய்து ஒடவேண்டுமா? ஐந்து லட்சம் தமிழர்கள், சைவர்கள் வாழும் நாட்டிலே முருகன் கோயிலுக்கா இடமில்லை! பேராதனைச் சர்வகலாசாலை மற்றவர்களைப்போல்சைவர்களுக்கும் சமஉரிமையாகும். அக்கோயில் கட்டப்பட்டால், அப்பகுதியில் தமிழரின் நிலைமை பலப்படுவதுடன், அங்குள்ள முருகன், தமிழர், சிங்களவர் ஒற்றுமையையும் நிலைநாட்டுவானல்லவா?

ஃ ஃ ஃ

சைவ மாணவர்கள் அங்கு சிரமதானம் செய்ததைச் சிலர் "இது ஒரு ராக்கிங்" என்று விஷமமாகத் திரித்துக்கூறி, செய்தி வெளியிட்டுள்ளதாக ஒரன்பர் வருத்தத்துடன் தெரிவித்தார். இத்திருப்பணியில் புதிய மாணவர்கள் மட்டுமன்றி, பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டுள்ளதாகவும் மற்றவர்கள் சிற்றுண்டி உதவியதாகவும், வெள்ளிக்கிழமைதோறும் மழையில்லாவிடில் பிரார்த்தனைக் கூட்டம் அங்கு ஆலய மைதானத்தில் நடைபெறுவதாகவும், சிலர் நன்மை செய்யாவிட்டாலும் தீமைசெய்யாமலாவது இருப்பார்களாக என்று இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் ஓரன்பர் உணர்ச்சியுடன் எழுதுகின்றார்.

இத்திருப்பணிக்குச் சுமார் 2 லட்சமாகுமாம். எம். [illegible]

வழைத்து யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு இம்மூன்று இடங்களிலும் மூன்று கச்சேரிகள் வைத்தால், இந்த முக்கியமான கோயிலைக்கட்டிக் கும்பாபிஷேகமும் செய்துவிடலாம். உலகப் புகழ்பெற்றுள்ள எம். எஸ். இந்தப் புண்ணிய கைங்கரியத்தைச் செய்தால் ஈழத்துச் சைவ உலகம் அவரை என்றென்றும் நன்றியுடன் போற்றுவதுடன், இந்திய-இலங்கை நட்புறவு பலப்படுவதாக இருக்கும். எல்லாம் வல்ல முருகன் துணைசெய்வாராக!

ஃ ஃ ஃ

உருவாருள்ளத் தொண்
சுடர் தனக்கென்றும்
அன்பராம் அடியார்கள்,
மருகு ஆரமுதென நின்று
பரிவொடுமத்தி
செய்தெத்திசையும்,
குருகு பாழ்வயல் சூழ்தரு
கோட்டூர் நற்கொழுந்தே
யென்றெழுவார்கள்,
அருகுசேர்தரு வினைகளும்
அகலும்போய் அவனருள்
பெறலாமே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்,

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

# பிறப்புப்பத்திரங்கள் சிங்களத்திலா?

நவம்பர் மாதம் 18-ந் திகதி வெளிவந்த ஆங்கில தினசரியொன்றில் வெளிவந்த செய்தியொன்று அதிர்ச்சியளித்திருக்கிறது. இரண்டு வருடங்களுக்குப் பின் பிறப்புப் பத்திரங்கள் சிங்களத்தில்மட்டும் கொடுக்க வேண்டுமென்றும், தமிழ் பேசும் பிரதேசங்களில் சிங்கள மூலத்துடன் தமிழ் மொழிபெயர்ப்பு இணைக்கப்படவேண்டுமென்றும் மந்திரி தகநாயக்கா சிபார்சு செய்துள்ளதாக அச்செய்தி கூறுகின்றது.

தேசியஅரசாங்கம்அமைக்கப்பட்டபோது நாம் மகிழ்ச்சியடைந்தோம். எமது மொழிப்பிரச்சினை தீருமென்றும், உண்மையான தேசிய ஐக்கியத்தையும், ஜனநாயகத்தையும் கட்டிவளர்க்குமென மனக்கோட்டை கட்டினோம். இவ்வருடம் தமிழ் மொழிச்சட்ட விதிகள்சட்டமாக்கப்பட்டதும் பிரச்சினை தீர்ந்துவிட்டதென்று எண்ணினோம். ஆனால் நடப்பது வேறு.

ஆங்கிலத்தில் நிர்வாகம் தொடர்ந்து நடக்கிறது. ஆனால் எமக்குக் கிடைக்கும் கடிதங்களோ சிங்களத்தில் எழுதப்படுகிறது. அவற்றிற்கு மொழிபெயர்ப்புக் கிடைப்பது அரிது. இவ்வாறு உரிமையைப்பெற்றும் பெறாதவர்கள்போல் நடத்தப்படும்போது பிறப்புப்பத்திரங்கள் சிங்களத்தில் மட்டுமென்றால் தமிழ் எங்கே? தமிழர் உரிமை எங்கே?

எஸ். கந்தசாமி

நல்லூர்.

ஃ ஃ ஃ

# சமயமறுமலர்ச்சி

தாழ்த்தப்பட்டவருள் ஒரு பகுதியார் வேறொரு சமயத்தில் சேர்ந்து கொண்டனர். சைவ மக்களாகிய எம் சமூகத்தினர் காலத்துக்குக் காலம் சைவமதமல்லாத மதங்களில் சேர்ந்துகொண்டால் சைவ மதமும் கலாச்சாரமும் காலப்போக்கில் மறைந்து விட்டாலும் ஆச்சரியப்படமுடியாது. ஆகவே தாழ்த்தப்பட்டமக்களாகிய நாம் தீண்டாமையை ஒழிப்பதற்காக இல்லாமல், வெள்ளையரின் ஆட்சிக்காலத்துக்கு முன் நாம் இந்துக்களாக இருந்தவர்கள். என்ற முறையில் சமயத்தின் வளர்ச்சிக்காக அதைப் பேணவும் பாதுகாக்கவும் மதம் மாறியவர்களுக்கெதிராகப் போராட்டம் நடத்தவும் வேண்டும். ஆலயப் பிரவேசத்தின் மூலம் சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திவிட முடியாது. சைவம் அல்லாத மதங்களில் உள்ள எம் சமூகத்தவர்கள் எல்லோரையும் பிரசாரத்தின் மூலம் இந்துசமயத்தைத் தழுவச் செய்வதன் மூலம்தான் ஒரு நிலையான தமிழர்ஒற்றுமையையும், சமய சமூக மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திவிடமுடியும்.

க. ஆறுமுகம்.

அரியாலை.

ஃ

# யாழ்.—பலாலி பஸ்சேவை

இ. போ. ச. வின் பலாலி-யாழ்ப்பாணம் சேவை மோசமானநிலையை அடைந்துள்ளது. இவ்வழியே பிரயாணம்செய்யும் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பிரயாணிகள் இச்சேவை மீது அதிருப்தி கொண்டுள்ளனர்.

காலை 7 மணிக்கும் ஒன்பது மணிக்குமிடையே அதிகமானோர் தத்தம் அலுவல்கள் பொருட்டு யாழ்ப்பாணம் செல்வதற்காகப் பஸ்ஸுக்குக் காத்துநிற்கும் வேளையில், இச்சேவையில் ஐந்து அல்லது ஆறு பஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பலாலிநோக்கிச் செல்கின்றன, இவற்றில் சில பஸ்களில் பத்து அல்லது பன்னிரண்டு பிரயாணிகளே காணப்படுகின்றனர். யாழ்ப்பாணம் நோக்கிச்செல்லும் பஸ்களோ இரண்டு அல்லது மூன்று தான்.

நேர அட்டவணைக்குப் பொறுப்பாக உள்ளோர் இவ் விஷயத்தில் சிறிது அக்கறை காட்டினால். இந்நிலையை நிவர்த்திசெய்ய முடியுமென நம்புகிறோம். அதிகாரிகள் கவனிப்பார்களா?

ம. திருஞானம் மயில்வாகனம்.
உரும்பராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளங்களைத் திருத்த நடவடிக்கை

வல்வெட்டித்துறை, திங் பருத்தித்துறைப் பகுதியிலுள்ள குளங்களை ஆழமாகத் தோண்டியும், வாய்க்கால்களை திருத்தம்செய்தும், நீர்ப்பாசனமூலம் விவசாயத்தை விஸ்தரிப்பதற்காகவும், குளங்களை அடுத்துள்ள பகுதிகளிலிருக்கும் வீடுகளில் நீர் புகுந்து அழிவைக் கொடுத்துவரும் இன்னல்களிலிருந்தும் மக்களைப் பாதுகாப்பதற்குமாக பருத்தித்துறை எம்.பி. திரு. க. துரைரத்தினம், சமுதாய சேவை உதவி ஆணையாளர் திரு. கே. சபாரத்தினம், வடமராட்சி நீர்ப்பாசன அதிகாரி திரு. ஏ. சந்திரசேகரம் ஆகியோர் வியாபாரிமூலை, நெற்கொழு, திருவில், கவடுவிருய், மாய்க்கிரான், குடத்தனை, நாகர்கோவில் கரையூர், அம்பன் ஆகிய இடங்களிலுள்ள குளங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

## விழுந்தவர் எழவேயில்லை

திருநெல்வேலி, திங் மானிப்பாயைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியரான ஆறுமுகம் நவரத்தினம் என்பவர் திடீரென நிலத்தில் வீழ்ந்து நேற்றுமாலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த தாதியான செல்வி யோகம்மா சங்கரப்பிள்ளை சாட்சியமளிக்கையில், காலஞ்சென்றவர் இருதயநோயினால் இம்மாதம் 17ம்திகதி வார்டில் அனுமதிக்கப் பட்டாரென்றும், அவருடன் உதவிக்கு யாரும் வார்டில் தங்குவதில்லையென்றும், நேற்றுமாலை வார்டிலுள்ள மலசலகூட அறைக்குள் காலஞ்சென்றவர் விழுந்து கிடப்பதாகத்தனக்கு தெரிவிக்கப் பட்டதென்றும், ஆனால் சிறிதுநேரத்தில் அவர் மரணமடைந்து விட்டதாகவும் தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி இயற்கைமரணம் என்று தீர்ப்பளித்தார்.

## ஆசிரியர்மீது மேலும் கட்டுப்பாடு

புன்னாலைக்கட்டுவன், திங் ஆசிரியர் பாடசாலை ஆரம்பமாவதற்கு ஐந்து நிமிடமாவது முன்னர் பாடசாலையில் இருக்க வேண்டுமென்றும் அதன்பின்னர் பாடசாலை செல்லும் ஆசிரியர் தாமதத்துக்கான காரணத்தை அதிபருக்குச்சமர்ப்பிக்கவேண்டுமென்றும் ஒருமணித்தியாலத்துக்குள் தாமதித்துவரும் ஆசிரியர் குறுகிய லீவு எடுத்திருப்பவராகக் கருதப்படுவரென்றும் நேற்றுவெளியாகிய கல்வியமைச்சின் சுற்றுநிருபம் ஒன்று கூறுகிறது.

ஆசிரியர் பாடசாலையை விட்டுச் செல்லும் போதும், வருகை செல்கைபதிவுப்புத்தகத்தில் கையெழுத்திட்டு, நேரமும்பதியவேண்டுமென்றும் இதிற்கூறப்பட்டுள்ளது.

## இலாகா இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ். தற்பொழுது நல்லூரில் இருக்கும் வருமானப்பகுதி இலாகா அடுத்த ஆண்டு முதல் யாழ்ப்பாணம் பிரதானவீதியிலுள்ள ஒரு கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட விருக்கிறது.

தற்பொழுது இந்த இலாகாவுடன் தொடர்பு கொள்ளும் பொதுமக்கள் இந்த இடத்திற்கு செல்வதற்கு போக்குவரத்தில் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

## நகரசபையும் நிருபர்களும்

நாவலப்பிட்டி திங். நாவலப்பிட்டி நகரசபை அங்கத்தவர்களுக்கும் பத்திரிகை நிருபர்களுக்குமிடையில் பெரும் போட்டி நடந்துகொண்டிருக்கிறது.

முன்னர் பத்திரிகை நிருபர் ஒருவரை வெளியேற்றியதும் நினைவிருக்கலாம்.

அண்மையில் நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் பத்திரிகை நிருபர்களை அனுமதிக்கக்கூடாது என்று கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒரு அதிகப்படியான வாக்கால் நிறைவேறியது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட மேற்படி பிரேரணையை ஆதரித்து ஜனாப் சாலி, ஜனாப் தாயிர், ஜனாப் பாரூக்டீன், நகரசபைத் தலைவர் திரு. பி. ஏ. டேவிட் பெரேரா ஆகியோர் வாக்களித்தனர்.

திரு. ரணசிங்கா, திரு. டி. சில்வா, திரு. குணவர்த்தன ஆகியோர் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.

## உடுப்பிட்டி

## கிராமசபையின் கட்டட பிரச்னை

உடுப்பிட்டி, திங்கள் உடுப்பிட்டி கிராமசபையின் புதிய கட்டடம் உடுப்பிட்டிச் சந்தை மைதானத்தில் கட்டப்படலாமென்றும் கிராமசபையைப் பட்டினசபையாகத் தரம் உயர்த்தும்பொழுது கிராமசபையின் அரைவாசிப் பகுதியே பட்டினசபையாகுமென்றும், கட்டப்படவிருக்கும் புதிய கட்டடம் பட்டினசபைக் காரியாலயமாக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

தற்பொழுதுள்ள கிராமசபைக் காரியாலயம் தொடர்ந்து இருக்குமென்றும், இம்மாற்றம் அங்கத்தவர்களிடையே பலத்த எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளதென்றும் அறியப்படுகிறது. இதுசம்பந்தமான முடிவை அங்கத்தவர்களே தீர்மானிக்கவேண்டுமென்று அவர் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## இடமாற்றம் வேலை நிறுத்தத்தின் எதிரொலி

கொழும்பு, திங்கள் மோட்டார் போக்குவரத்து இலாகாவில் இவ்வருடம் ஜனவரி 8-ந் திகதி வேலைநிறுத்தம் செய்த அரசாங்க ஊழியர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, விசாரணையின் பின்னர் வேறு இலாகாக்களுக்கு இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இத்தீர்மானம் நிறைவேறியதைத் தொடர்ந்து அங்கு சமூகமளித்திருந்த நிருபர்கள் தமது ஆசனங்களை விட்டெழுந்து பொதுமக்கள் கலரியில் உட்கார்ந்து கூட்ட நிகழ்ச்சிகளை அவதானித்தனர்.

## லொறி மோதி சிறுமி காயம்

உரும்பராய், ஞாயிறு உரும்பராயைச் சேர்ந்த செல்வி லதாதேவி என்னும் ஐந்து வயதுச் சிறுமி நேற்று பாடசாலையைவிட்டு வீடு நோக்கி வரும்போது லொறி யொன்றினால் மோதப்பட்டு சிறு காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸார் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை நடாத்தினர்.

## சாட்சிகளுக்கு வாரண்ட்

சாவகச்சேரி, திங்கள் பெண் கடத்தல் வழக்கொன்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 14 வயதுப்பெண் முருகாய் என்பவரும் இவரது பெற்றோரும் முக்கிய சாட்சிகளாக இருந்தும் கோர்ட்டிற்கு வராதவறியதற்காக நீதிபதி திரு. வி. எம். குமாரசுவாமி 'பெஞ்ச் வாரண்ட்' பிறப்பித்து மேல் விசாரணையை டிசம்பர் 8ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் இவ்வருடம் மே மாதம் 21-ம் திகதி கிளிநொச்சியில் மருதாய் செல்லையா என்பவர் காளிமுத்து மகள் முருகாயை (14வயது) கடத்தியதாகக் கிளிநொச்சிப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. வழக்காளி தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ் கே. திரவியநாயகம் கிளிநொச்சிப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. சி. என். பொன்னம்பலத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

## சங்காபிஷேகம்

காரைநகர், திங்கள் காரைநகர் சிவன்கோவிலில் வெள்ளிக்கிழமை காலை நவோத்தர சங்காபிஷேகம் நடைபெறும்.

## பஸ் நிலையத்தில் இளைஞன் கைது

திருநெல்வேலி, திங்கள் நேற்று மாலை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள்களால், திருடன் எனச்சந்தேகிப்பட்ட ஒரு இளைஞன் கைதுசெய்யப்பட்டார்.

மேற்படி இளைஞன் தீபாவளித்தினத்தன்று திருக்கோணமலையிலுள்ள வீடொன்றில் முன்னூறுரூபாபணத்தையும் தங்கச் சங்கிலியொன்றையும் களவாடி யாழ்ப்பாணம் வந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். பொலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## விஞ்ஞான கூட விஸ்தரிப்பு

புன்னாலைக்கட்டுவன், திங் வடமராட்சிப் பகுதியிலும், வலிகாமம் கிழக்குப் பகுதியிலும் உள்ள பாடசாலைகளில், விஞ்ஞான கூடங்கள் விஸ்தரிப்பதற்கும், போதிய ஆய்வுகூடப் பொருட்கள் தருவிப்பதற்குமான விபரங்களை வித்தியாதரிசி திரு. வி. தர்மசங்கரி திரட்டி வருகிறார்.

# நகரசபை, கிராமசபை எல்லை விஸ்தரிப்பு

### கமிஷனுக்கு அபிப்பிராயம் தெரிவிக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு சாவகச்சேரி நகரசபை, கிராமசபை ஆகியவற்றிற்கான எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு, பொது மக்கள் தனித்தனியாகவும், பொது நல சமூக சேவாஸ்தாபனங்கள் மூலமாகவும் தங்கள் அபிப்பிராயங்களை இம்மாதம் 23-ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பின்வரும் காரணங்களை முடிவு செய்யும்பொருட்டு அபிப்பிராயங்களை ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கும்படி பொது மக்களைக் கேட்டுள்ளார்.

சாவகச்சேரி கிராமசபையின் பகுதிகள் சிலவற்றை நகரசபையுடன் சேர்க்க வேண்டுமா? சாவகச்சேரி நகரசபையின் பகுதிகள் சிலவற்றைக் கிராமசபையுடன் சேர்க்க வேண்டுமா? நகரசபை வட்டார எல்லைகள் திருத்தியமைக்கப்படவேண்டுமா? கிராமசபை வட்டார எல்லைகள் திருத்தியமைக்கப்பட வேண்டுமா?

எல்லைநிர்ணய ஆணைக்குழு செயலாளர் திரு. நல்லைநாதன், உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் வவனியா என்ற விலாசத்துக்கு அபிப்பிராயங்களை அனுப்பிவைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விஸ்வமடு குடியேற்றத்திட்டம்

### வாலிபர்களை எதக்நோக்கும் பிரச்னைகள்

உடுப்பிட்டி, திங்கள் கடந்த ஜூலை மாதம் அரசாங்கத்தினால் விஸ்வமடுத் திட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கைக்காகக் குடியேற்றப்பட்ட 100 வாலிபர்கள் வருகிற ஜனவரி மாதம் தங்களால் பயிர் செய்யமுடியாது போய் விடுமோ என்று அஞ்சுகின்றனர்.

இவ்வாலிபர்கள் விஸ்வமடுவில் குடியேற்றப்பட்டு ஐந்துமாதங்களானபோதும் இவர்களுடைய பயிர்ச்செய்கைக்கு தண்ணீர் வசதியளிப்பதற்குஇன்னும்வாய்க்கால் வெட்டப்படவில்லையாம். இதுசம்பந்தமாகக் காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவைப் பேட்டிகாண்பதற்காக ஒரு குழுவை நியமித்துள்ளார்கள். இக்குழு அடுத்த மாத முற்பகுதியில் மந்திரியைப் பேட்டி காணும் என அறியப்படுகிறது.

## மோட்டார்கார் பற்றியவழக்கு

வல்வெட்டித்துறை, திங்கள் 200ரூத்தல் நிறையுள்ள அபினை கடத்திச் செல்வதற்கு உதவியதாக பருத்தித்துறையைச் சேர்ந்த வி.வல்லிபுரத்தின் மோட்டார் கார் ஒன்றைப் பறிமுதல் செய்வதற்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதியால் மோட்டார் கார் சொந்தக்காரருக்கு நோட்டீஸ் பிறப்பித்து தொடர்ந்த வழக்கு மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரசாங்க தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. கே. இரத்தினசிங்கம் மோட்டார் காரைப் பறிமுதல் செய்வதற்கு பல ஆதாரங்கள் இருப்பதாக எடுத்துக் காட்டினார்.

இக்காரோடு சம்பந்தப்பட்ட வழக்கொன்று அப்பீலில் இருப்பதாகவும் அதைத் தவிர கார் சொந்தக்காரராலும் தனிப்பட்ட முறையில் கார் சம்பந்தமான வழக்கொன்று தாக்கல் செய்திருக்கிறபடியாலும் இத் தருணத்தில் காரைப் பறிமுதல் செய்வது சரியல்லவென்றும் காரின் சொந்தக்காரருக்காக ஆஜரான வழக்கறிஞர் திரு. வி.பி.சுந்தரலிங்கம் எடுத்துக்கூறினார்.

நீதிபதி இதனை ஏற்றுக்கொண்டு அவ்வழக்குகள் முடியும் வரைக்கும் காரை உதவி சுங்க அதிகாரியின் பொறுப்பில் வைக்கும் படி உத்தரவிட்டார்.

## எதிர்க்கட்சியினர் ராஜினாமா

ஹைதராபாத், நவ. 21 ஆந்திராவில் 67 எதிர்க்கட்சி எம். எல். ஏ.க்கள் கூட்டாகத் தமது ராஜினாமாக்களைச் சமர்ப்பித்துள்ளனர். ஆந்திரா முதன்மந்திரி இவர்களை ராஜினாமா செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

ராஜினாமா செய்வது துரதிரஷ்டவசமானது என்றும் சொன்னார். ராஜினாமா செய்வது வேதனையளிப்பதாகுமென்று சபாநாயகர் கூறினார்.


# அழகும் ஆரோக்கியமும் கொழிக்கும் தாயும் சேயும்....




அழகு, ஆரோக்கியம், திடமிக்க பாதுகாப்பான எதிர்காலம் ஆகியன பெருமளவில் நல்ல ஆரோக்கியத்தில் தான் தங்கியுள்ளன. நல்ல ஆரோக்கியத்தைப் பெற சிறந்த உணவு அத்தியாவசியம். செவன் சீஸ் சக்தி விருத்திக்கான உயர்தர எண்ணெய்களுடன் சமமான ஊட்டச் சத்துகள் ஏயும் டீயும் சேர்ந்த இயற்கையான செழுமையான தயாரிப்பு. இது முழுக்குடும்பத்திற்கும் முன்னேற்றமான நல்லாரோக்கியத்தை அளிக்கும்.



செழுமை மிக்க தங்கமய மீன் எண்ணெய் அல்லது வில்லைகள்.

செவன்சீஸ்

செவன்சீஸ் தயாரிப்பாளரின் சொந்தப் போத்தல்களில் உங்களுக்கு நேரடியாகக் கிடைக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நொக்கவுட்" சுற்றுப்போட்டி

# சென். மேரிஸ், ஒலிம்பிக் கோஷ்டிகள் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் விளையாட்டு சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரு போட்டிகளில் நாவாந்துறை சென் மேரிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டியும், யாழ்ப்பாணம் ஒலிம்பிக் உதைபந்தாட்டக் கோஷ்டியும் வெற்றிபெற்றன.

சென். மேரிஸ் கோஷ்டிக்கும் அரியாலை ஐக்கியவிளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் பெரும் மோதலாகக் காணப்பட்டது. இரு சாராரும் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை கோஷ்டியின் 'பாஸிங்' விளையாட்டு சிறப்பாகவிருந்தது. இக் கோஷ்டியைச் சேர்ந்த அடைக்கலம் என்னும் வலது முன்னணி வீரர் முதலாவது கோலை நாவாந்துறைக்குப் பெற்றுக்கொடுத்தார்.

இடைவேளைக்குப் பின்னர் போட்டியின் தரம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது இரு சாராரும் கடுமையாக மோதினர். இதன் பயனாக ஒருவருமே கோல்கள் போடவில்லை. நாவாந்துறையின் பின்னணி வீரர்கள் ஆர். சேவியர், மைக்கல்தாசன், அன்ரனி ஆகியோரின் விளையாட்டு பாராட்டத்தக்கது. அரியாலையின் பின்னணி வீரர்களின் ஆட்டம் சிறப்பாகவிருந்தது. இப்போட்டி முடிவில் நாவாந்துறை சென். மேரிஸ் கோஷ்டி அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 1—0 கோலால் வெற்றி யீட்டியது. இப்போட்டிக்கு திரு ஞானரெட்ணம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## ஒலிம்பிக் கோஷ்டியின் சிறப்பான ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒலிம்பிக் கோஷ்டிக்கும் குருநகர் புனிதவளன் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஆட்டம் ரசிக்கக்கூடியதாகவிருந்தது.

இடைவேளைக்குமுன் ஒலிம்பிக் கோஷ்டியினர் ஒருகோல் பெற்றனர். எதிர்க்கோஷ்டியினர் பலதடவைகள் கோல்கள் போட முயற்சித்தும் தோல்வியடைந்தனர். இடைவேளைக்கு முன் குருநகர் புனிதவளன் கோஷ்டியினர் ஒருகோலும்போடாத வகையில் ஒலிம்பிக்கோஷ்டியினர் ஒரு கோல் போட்டிருந்தனர். இடைவேளைக்குப் பின்னர் ஒலிம்பிக் மேலும் ஒரு கோல் போட்டது. இப்போட்டி முடிவில் ஒலிம்பிக்கோஷ்டி 2—0 கோல்களால் குருநகர் புனிதவளன் கோஷ்டியைத் தோற்கடித்தது.

## சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

நவாலி சென். பீற்றர்ஸ் கழகத்தைச் சேர்ந்த தச்சுத்தொழிலாளருக்கும் மீன்பிடித் தொழிலாளருக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் பெனடிக், ஜே. பேசுதாசன், ச. பேரின்பநாதன் ஆகியோரின் விளையாட்டினால் மீன்பிடித் தொழிலாளர் 6—0 கோல்களால் வெற்றியீட்டினர். நவாலி சென். பீற்றர்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டி இராசலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## உரும்பராய் வெற்றி

புன்னாலைக்கட்டுவன், திங்.

குருநகர் விளையாட்டுக்கழகத்துக்கும், உரும்பிராய் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதற்பிரிவு உரும்பிராய் கோஷ்டி 4-1 கோல்களாலும், இரண்டாம்பிரிவுக் கோஷ்டி 2-0 கோல்களாலும் வெற்றி பெற்றன. திரு. எஸ். பரமேஸ்வரன் மத்தியஸ்தம் வகித்தார்.

## சங்கிலியன் வெற்றி

சங்கானை திங்கள்

சண்டிலிப்பாய் விளையாட்டுக்கழகத்திற்கும் பண்டத்தரிப்பு சங்கிலியன் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் 7—1 கோல்களால் சங்கிலியன் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியுள்ளது.

## கல்லூரி ஆண்டுவிழா

கோப்பாய், திங்கள்

கோப்பாய் மாலை நேர வகுப்புக்கல்லூரியின் முதலாவது ஆண்டுநிறைவு விழா திரு. ஆ. காசிப்பிள்ளை தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. ஆண்டறிக்கையை, கல்லூரியின் அதிபர் வ. சதானந்தன் வாசித்தார்.

கல்லூரியின் நிதிநெருக்கடியையும் பொருட்படுத்தாது ஆசிரியர்கள் தங்களது கடமையைச் சரிவரச் செய்வதாக அதிபர் கூறினார்.

## ஈ. வெ. ராவுக்கு அனுமதி மறுப்பு

சென்னை, நவ. 21

காமராஜர் தாக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கு முகமாக திருவல்லிக்கேணியில் திராவிடத் தலைவர் ஈ. வெ. ரா. பெரியார் நடத்தவிருந்த கூட்டம் ரத்துச்செய்யப்பட்டது.

சென்னை நகரில் ஊர்வலங்கள் பொதுக்கூட்டங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டதைத்தொடர்ந்து கூட்டத்தை நடாத்தவேண்டாம் எனப்பொலிசார் திராவிடக் கழகத்தைக் கேட்டுக்கொண்டதன்பேரில் அக்கூட்டம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

## புதிய வீதிகள்

புன்னாலைக்கட்டுவன், திங்.

உரும்பிராய்கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினரின் சிரமதான முயற்சிமூலமும், ஊர்மக்களின் பண உதவி மூலமும் தாரிட்டு விஸ்தரிக்கப்பட்ட சிவன் தெருவும், செல்லப்பாவீதியும் அண்மையில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா வால் திறந்துவைக்கப்படும்.

## அபராதம்

சிதம்பரம், நவ. 21

சிதம்பரம் தில்லையம்மன் கோவிலில் கோழி பலியிட்ட கோவில் அர்ச்சகருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## பதினேழும் எழுபதும்

குன்னத்தூர், நவ. 21

70 வயதுக் கிழவரைத் திருமணம் செய்துகொண்ட 17 வயது இளம்பெண் இருமணமாகி ஒரு [illegible] இனற்றுள் விழுந்து தற்கொலை செய்துகொண்டார்.

## செய்திச்சுருக்கம்

### 28 நெசவாலைகள்

இவ்வருட இறுதிக்குள் 1000 நெசவாலைகள் நிறுவப்பட இருந்தும் 28 நெசவாலைகளே நிறுவமுடிந்தது என்று உள்ளூராட்சி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஃ ஃ ஃ

### தொழிற்பயிற்சி

கல்விப்பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் தோற்றிய மாணவ மாணவிகளுக்கு பல தொழிற் பயிற்சி அளிப்பதற்கான திட்டத்தைக் கல்வி அமைச்சு தயாரித்திருக்கிறது. இது அடுத்த ஆண்டிலிருந்து அமுல் நடாத்தப்படும்.

ஃ ஃ ஃ

### கோரிக்கை

நமது நாட்டைச் செல்வம் கொழிக்கச் செய்வதற்கு போட்டி, பூசல், பகை ஆகியவற்றை மறந்து ஒருமித்து பணிபுரிதல் வேண்டுமென்று ராஜாங்க அமைச்சர் பாணந்துறையில் பேசும்போது குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

### தும்பு ஆலை

தென் மாகாணத்திலுள்ள கொக்கலையில் 2 லட்சம் ரூபா செலவில் தும்பு ஆலை நிறுவப்படவிருக்கிறது. இதில் 1000த்திற்கு அதிகமான வர்களுக்கு வேலை கிடைக்கும்.

ஃ ஃ ஃ

### மகாநாடு

திருமலைத் துறைமுகத் தொழிலாளர் பிரச்னைகள் குறித்து பிரதமர் கூட்டும் மகாநாட்டில் தொழில், வர்த்தக, தேசியமய சேவைகள் அமைச்சர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

### விதைதானிய களஞ்சியம்

விவசாயத் தொழிலில் ஈடுபட்டோருக்கு நன்மை அளிக்கும் நோக்கமாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை, அனுராதபுரம், கண்டி, கேகாலை ஆகிய இடங்களில் விதைதானியக் களஞ்சியங்கள் விரைவில் நிறுவப்பட இருக்கின்றன.

ஃ ஃ ஃ

### பருத்தி உற்பத்தி

'அரசாங்கம் தேவையான பருத்தியை உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை மேற்கொண்டு வருகின்றது' என உள்நாட்டு அமைச்சர் காலி பரமானந்தவித்தியாலயத்தில் பேசும் போது தெரிவித்தார்.

## பூகோள நிபுணரின் கண்டுபிடிப்பு!

பென்ஸில்வேனியா, நவ. 21

பல ஊழிக் காலங்களுக்கு முன், புதிய சமுத்திரமான அத்லாந்திக் பிரிப்பதற்கு முன், வட, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்கள் அனைத்தும் ஒரே நிலப்பரப்பாக அமைந்திருந்ததாக பூகோளசாஸ்திர நிலைய அதிபரும், பிரபல பூகோள நிபுணருமான டாக்டர் ஜே. டூஸோ வில்ஸன் இங்கு உரை நிகழ்த்துகையில் தெரிவித்துள்ளார். (பி. டி. ஐ)

## வடக்கிலிருந்து வந்தனர்

சைகோன், நவ. 21

சென்றவாரம் வடவியட்நாமிலிருந்து மூவர் தென் வியட்நாமிற்குள் [illegible] வந்துள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (பி. டி. ஐ.)

# காதலில் தோல்விகண்ட காளையின் வெறியாட்டம்

## துப்பாக்கிக் குண்டுகளுக்கு மூவர் இரையானார்கள்

புத்தளம், திங்கள்

காதலில் தோல்விகண்ட காளையொருவன், தனது காதலியைத் தேடிச்சென்று மூவரைச் சுட்டுக் கொலை செய்த பயங்கர சம்பவமொன்று புத்தளம்-அனுராதபுரம் பாதையில் பத்தாவது மைலிலுள்ள கரவல்கல்வெலை எனும் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது. இக் கோர நிகழ்ச்சியினால் அக் கிராமம் சிறிது நேரம் அல்லோலகல்லோலத்துக்குள்ளாகிவிட்டது குப்புசாமி (53 வயது), வில்ஸன் (28 வயது) முனியம்மா (23) ஆகிய மூவரின் மரணம் குறித்து நடைபெற்ற மரணவிசாரணையில் இந்த விபரம் தெரியவந்தது.

பியசேன என்றவாலிபன் குப்புசாமியின் மகள் லீலாவதியை நேசித்தான் என்றும் பியசேனவை லீலாவதி வெறுத்துவந்ததால் அவன் விரக்திஅடைந்து மூவரையும் சுட்டுக் கொலை செய்ததாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

கடந்த பதினாறும் திகதி இரவு 7-30க்கு பியசேன கையில் துப்பாக்கியுடன் லீலாவதியைத் தேடி அவரின் வீட்டுக்குச் சென்றதாகவும் வீட்டு வாசலில் நின்று குப்புசாமியை நோக்கி முதலில் துப்பாக்கியால் சுட்டதாகவும் பின்னர் தப்பியோட முயற்சித்த வில்சன் என்பவரைச் சுட்டதாகவும் அதனைத்தொடர்ந்து வெளியில்வந்த லீலாவதியின் சகோதரி முனியம்மா மீது சுட்டதாகவும், வீட்டில் வேறு எவருமில்லாததால் பியசேன தனது 'காதலி' லீலாவைத் தேடி அங்குமிங்கும் அலைந்து திரிந்ததாகவும், பியசேனவின் வெறிபிடித்தசெயலைக் கண்ட கிராமமக்கள் உயிருக்குப் பயந்து காட்டுக்குள் ஓடி ஒழித்ததாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

### பொலிஸார் வந்தனர்

இச்சம்பவத்தின் நடுவே, எதிர்பாராதவிதமாக புத்தளம் நோக்கி 'வானில்' வந்துகொண்டிருந்த பொலிஸ் கோஷ்டியினர் விபரமறிந்து ஸ்தலத்துக்கு விரைந்து சென்று பியசேனவை 'வலை' போட்டுத் தேடினர். தீவிர முயற்சிகளின் பின்னர், பத்துமைல் தூரத்திலுள்ள பாழடைந்த வீடொன்றுக்குள் வைத்து பியசேனவை பொலிஸார் கைதுசெய்தனர். பியசேனவிடமிருந்து மூன்று 'எஸ். ஜி.' தோட்டாக்களையும் அவர்கள் கைப்பற்றினர்.

### மாண்டனர்

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களினால் முனியம்மா, ஸ்தலத்திலே மாண்டார். குப்புசாமியும் வில்சனும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். மகேஸ்வரனின் உதவியுடன் புத்தளம் ஆஸ்பத்திரியில் உடனடியாக அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சிகிச்சை அளிக்கப்படுவதற்கு முன்னதாகவே குப்புசாமியின் உயிர் பிரிந்துவிட்டது.

### சிசுவும் மரணம்

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எம். எம். காஸிம் மரண விசாரணைகள் நடத்தினார். பிரேத பரிசோதனை நடத்திய வைத்திய அதிகாரி, முனியம்மா நிறைமாதக் கர்ப்பிணியாகவிருந்தார் என்றும் பூரண வளர்ச்சிபெற்ற ஆண்குழந்தை அவரது வயிற்றில் இறந்திருந்ததென்றும் கூறினார்.

விசாரணை முடிவில் மூன்று கொலைகள் நிகழ்ந்திருப்பதாக தீர்ப்பளித்து பியசேனவை விளக்கமறியலில் வைக்கும்படியும் 28-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகுமாறும் மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

பியசேனவை பொலிஸார் கைதுசெய்துவிட்டனர் என்ற விபரம் வெளியான பின்னர்தான் அக்கிராம மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றனராம். பியசேனவின் காதலி என்று கூறப்பட்ட லீலா தப்பிவிட்டார்.

## ஐ. நாவுக்கு பயமில்லை!

ஜோஹன்னர்ஸ்பேர்க், நவ. 21

ரொடீஷியப் பிரச்னையை பிரிட்டன் ஐ நா. சபையில் எடுக்குமேயானால், பிரிட்டிஷ் பொருளாதாரத்துக்குச் சாவுமணி அடிக்கப்படுமெனத் தென்னாபிரிக்கப் போக்குவரத்து மந்திரி திரு. பென்ஸ்கூமன் இங்கு எச்சரிக்கை செய்துள்ளார். ஐ. நா. விதிக்கக்கூடிய சட்டத்தடை நடவடிக்கைகளையும் எதிர்த்து, ரொடீஷியாவுடன் தென்னாபிரிக்கா தொடர்ந்து வர்த்தகத்தில் ஈடுபடுமெனவும் அவர் கூறினார். (பி. டி. ஐ.)

## வீட்டுக்குள் நுழைந்த லொறி

புன்னாலைக்கட்டுவன், திங்.

சனிக்கிழமை தவிரங்கை ஊரெழுப் பிள்ளையார்கோவிலுக்கு அண்மையிலுள்ள ஒரு வீட்டின் வேலியுடன் மோதிய ஒருலொறிவீட்டுள் பாய்ந்தது. இதனால்எவரும் பாதிக்கப்படவில்லை.

## நெசவுநிலையம்

திருநெல்வேலி, செவ்.

கந்தர்மடம் ஜனசமூக நிலையத்தின் ஆதரவில் நிறுவப்படும் நெசவு நிலையத்திற்கான அத்திவாரக்கல்நாட்டு விழா வழக்கறிஞர் திரு. எஸ். நாகராஜா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. வழக்கறிஞர் திரு. எஸ். கதிரவேலு அத்திவாரக்கல் நாட்டினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உதவி மான்யத்தை குறைத்தது ஏன்?"

## அமைச்சருக்கு இந்து இளைஞர் மகஜர்

திருநெல்வேலி, செவ். "கடந்த ஆண்டுகளில் இந்து சமய சங்கங்களது வளர்ச்சிக்காக அரசாங்கம் அளித்த மான்யம் இந்த ஆண்டில் அதிகமான அளவு குறைக்கப்பட்டுள்ளது. கலாச்சார அமைச்சு இந்து சமய வளர்ச்சிக்கு சென்ற ஆண்டுகளைப் போலல்லாது இந்த ஆண்டில் தனது மான்யத்தை மிகவும் குறைத்துள்ளது இந்து சமய வளர்ச்சி குன்றி வருகின்றதா? அல்லது இந்து மதமக்கள் வேறு மதங்களைச் சேர்ந்து விட்டார்களா? இதற்கான நடவடிக்கையை உடனே மேற்கொண்டு இந்து சமய சங்கங்களது வளர்ச்சிக்கு உதவிபுரியுங்கள்"

மேற்கண்ட மகஜரை திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்கத்தார் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்துக்கு அனுப்பியுள்ளார்கள்.

அமைச்சருக்கு அனுப்பப்பட்ட மகஜரின் பிரதிகள் தமிழரசுக் கட்சித் தலைவரான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

### முட்டுக்கட்டை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாளிமார் சம்மேளனம் கடைசியாக தொழில் மந்திரிக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் வேலைநிறுத்தப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள தாங்களும் அக்கறைகொண்டுள்ளதாகவும், நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். மந்திரி முன்னதாக எழுதியிருந்த கடிதத்துக்குப் பதிலளிக்குமுகமாகவே இப்போது இக்கடிதத்தைச் சம்மேளனம் அனுப்பியிருக்கின்றது.

வர்த்தக ஊழியர் சங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் அரசாங்கம் முதலாளிமாரை சுமுகமான முடிவுக்கு வரும்படி தூண்டவேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

# யாழ். பஸ் சேவைகள் பாதிக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், செவ். கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் பஸ்சேவைகள் மோசமடைந்துள்ளதாகப் பிரயாணிகள் இ. போ. ச. அதிகாரிகளுக்கு புகார்செய்துள்ளனர்.

நேர அட்டவணையின் பிரகாரம் சில பகுதிகளில் பஸ் சேவை செயற்படாததால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர் ஆகியோர் மேலும் பாதிக்கப்படுகின்றனராம்.

இப்படியாக பஸ்சேவை திடீரென மோசமடைவதற்கு பஸ் ஊழியர்கள் முன்னறிவித்தலின்றி லீவு எடுப்பதே காரணம் எனக் கூறப்படுகிறது.

# வெற்றுப் புட்டிகளுக்கு இறக்குமதித் தடை

கொழும்பு, திங்கள் வெற்று மருந்துப் புட்டிகளின் இறக்குமதியை ஏற்றுமதி இறக்குமதி இலாகா தடைசெய்துள்ளது. அண்மையில் ஓர் மருந்துச்சரக்கு விநியோகஸ்தர், தயாரிப்பாளர்களால் மேலும் உறுதிப்படுத்தப்பட்ட மருந்துகளைப் போட்டு வைப்பதற்காகத் தேவையெனக் கூறி. இவ்வெற்றுப் புட்டிகளை இறக்குமதிசெய்ய அனுமதி கோரியிருந்தார். இலாகா

அதற்கு மறுத்துவிட்டது. இதைத்தொடர்ந்தே, வெற்றுப் புட்டிகளின் இறக்குமதிக்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றுப் புட்டிகளைக் காலங்கடந்துவிட்ட மருந்துகளை அடைப்பதற்கு விநியோகஸ்தர்கள் உபயோகிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உதவிச்சுகாதார டைரக்டர் கேட்டிருக்கிறார்.

### அபராதம்

சாவிட்டபுரம், திங்கள் உடுப்பிராய் தெற்கைச் சேர்ந்த மாணிக்கம் பொன்னுத்துரை என்பவர் சட்டவிரோதமாக வடிசாராயம் வடித்ததாகவும், 20 ரூம்வடி சாராயம் வைத்திருந்ததாகவும் சுன்னாகம் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். திருச்செல்வம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி எதிரியை 300 ரூபாய் அபராதம் செலுத்தும்படி கட்டளையிட்டார்.

ஊரெழுவைச்சேர்ந்த கே. நாகமுத்து என்பவர் சட்டவிரோதமாக ஐந்துடைனமைட் வைத்திருந்ததாக சுன்னாகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி எதிரியை ஐம்பது ரூபாய் அபராதம்செலுத்தும்படி கட்டளையிட்டார்.

# திருடியதா[illegible] வழக்கு

யாழ்ப்பாணம், செவ். நல்லூரிலுள்ள தேநீர்க்கடையொன்றுக்குள் இரவில் புகுந்து திருடியதாக இரத்தினம் என்ற நபர்மீது பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பில் புறக்டர் தம்பையாசிங்கம் யோகநாதன் ஆஜரானார்.

மாஜிஸ்திரேட் எதிரியை நூறு ரூபா பிணையில்செல்ல அனுமதியளித்தார்.

### யாழ்ப்பாண நூல்நிலையம் கணக்கெடுப்புக்காக மூடப்படும்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண மத்திய நூல் நிலையம் கணக்கெடுப்பதற்காக அடுத்த மாதம் 11-ம் திகதி முதல் 31-ம் திகதி வரை மூடப்படவிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்மத்திய நூல்நிலைய இரவல் வகுதியிலிருந்து எடுத்த புத்தகங்களை அடுத்த மாதம் பத்தாம் திகதிக்கு முன் திருப்பிக் கொடுக்கும்படி நூல்நிலையப் பொறுப்பாளர் பொது மக்களிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். திருப்பிக் கொடுக்காதவர்களிடம் ஒரு நாளைக்கு 5 சதவீதம் தண்டம் அறவிடப்படும். நூல் நிலையத்திலிருந்து இம்மாதம் 26-ந் திகதிக்கு மேல் கணக்கு எடுத்து முடியும் வரை பொது மக்களிற்கு நூல்கள் விநியோகிக்கப்படமாட்டாது எனவும் யாழ்ப்பாண மத்திய நூல் நிலையப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### பிரதமரின் செய்தி

கொழும்பு, திங்கள் "அந்நிய மூலதனத்தில் அதிகரிப்பு மட்டுமின்றி, அதிக சலுகைகளை நாம் ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் பெறுவதை எதிர்பார்க்கிறோம்" என்று இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஆசிய அபிவிருத்தி வங்கியின் முதலாவது பொதுக் கூட்டத்தையிட்டு 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையின் அனுபந்தத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இப்பொதுக்கூட்டம் 24-ம் திகதியன்று டோக்கியோவில் நடைபெறவிருக்கிறது.

### எதிரிகள் சரண்

திருநெல்வேலி, செவ். எதிரியொருவருக்கும் அவருக்குப் பிணைநின்றவருக்கும் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் வாரண்ட் பிறப்பித்ததைத்தொடர்ந்து புரக்டர் ஏ. அன்ரனிமூலம் இருவரும் நேற்றுக் கோர்ட்டில் சரணடைந்தனர்.

இவ்வழக்கில் அரியாலையைச் சேர்ந்த தங்கராசா என்பவர் இன்னொருவருடைய வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அங்கு குற்றம்புரிய எத்தனித்ததாக யாழ்ப்பாணம் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரியை ஏற்கனவே சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ் என்பவர் பொலிசில் பிணை எடுத்துச் சென்றிருந்தார். கடந்த தவணைக்கு எதிரி கோர்ட்டுக்குச் சமூகம் கொடுக்காதபடியால் மாஜிஸ்திரேட்டினால் எதிரி மீதும் பிணைநின்றவர் மீதும் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எதிரிக்குப் பிணைநின்ற சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ் கடந்த தவணையின்போது எதிரியைக் கோர்ட்டுக்குக் கொண்டுவராதபடியால் அவருக்கு ஐந்து ரூபா குற்றம் விதித்து, எதிரியைப் புதுப்பிணையில் மாஜிஸ்திரேட் விட்டார்.

மேல் விசாரணை பெப்ரவரி 20-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, திங்கள் கிறிஸ்மஸ் பண்டிகையின்போது சாராயம் பெருமளவில் கிடைக்குமென்றும், எந்தக் காரணத்தையிட்டும் அடுத்த 6 மாதங்களுக்கு சாராய சப்ளையில் வெட்டு ஏற்படாதென்றும் தவால் [illegible] இலாகா [illegible] தெரிவித்துள்ளார்.

வியட்னும்

# யுத்தம் பரவினால் ஆஸி. குதிக்கும்

## பிரதமர் ஹோல்ட் எச்சரிக்கை

பிறிஸ்பேன், நவ. 21 வியட்னும் நெருக்கடி மோசமாகுமானால், ஆஸ்திரேலியா நேரடியாகக் கலந்துகொள்ளும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்ட் எச்சரிக்கை செய்துள்ளார்.

டெலிவிஷனுக்கு அளித்த ஒரு பேட்டியில், வியட்னும் யுத்தத்தைத் தணிக்க வேண்டுமென்பதே ஆஸ்திரேலியாவின் நோக்கமென்றும் ஆனால் நெருக்கடியை விஸ்தரிக்கும் மோசமாக்கி யுத்தம் பரவுமானால் ஆஸ்திரேலியத் துருப்புகள் நேரடியாக யுத்தத்தில் ஈடுபடும் என்று பிரதமர் ஹோல்ட் தெரிவித்துள்ளார்.

வியட்னும் நெருக்கடி தணிந்துகொண்டால் ஆஸ்திரேலியாவின் ஈடுபாடும் குறையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கனிஷ்ட பல்கலைக் கழகங்கள் நிறுவும் இடங்கள்

## பிரதமர் பரிசீலனை

கொழும்பு, திங். கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் நிறுவப்படுவதற்கான இடங்கள் பற்றி கல்வி அமைச்சர் தெரிவு செய்து சிபார்சு செய்துள்ள இடங்கள்பற்றி பிரதமர் இப்பொழுது பரிசீலனை செய்துவருகிறார்.

கனிஷ்ட பல்கலைக்கழகம் மீண்டும் மட்டக்களப்பில் நிறுவப்பட வேண்டுமென்ற தமிழரசுக்கட்சியின் கோரிக்கைபற்றியும், குளியாப்பிட்டியில் ஒரு கனிஸ்டபல்கலைக்கழகம் நிறுவுவதற்குப்பதிலாக அதை குருணாகலையில் நிறுவவேண்டுமென்ற குருணாகல் எம்.பி.யின் கோரிக்கைபற்றியும் பிரதமர் பரிசீலனைசெய்துவருகிறார்.

கல்விஅமைச்சர் திரு.ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல்லை தமது குளியாப்பிட்டித் தொகுதியில்கனிஷ்டபல்கலைக்கழகம்நிறுவுவதென்று சிபார்சுசெய்திருப்பதற்குப் பலர் ஆட்சேபம்தெரிவித்துள்ளனர்.

2-வது டெஸ்ட் கிரிக்கெட்

# பாகிஸ்தானிடம் இலங்கை இனிங்ஸால் தோல்வி

டக்கா, நவ. 22 இலங்கைக் கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்குமிடையில் இங்கு நடைபெற்ற 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி ஒரு இனிங்ஸ் 37 ரன்களால் இலங்கை கோஷ்டியை தோற்கடித்தது.

ஸ்கோர் விபரம் வருமாறு:

பாகிஸ்தான் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 517 ரன்கள் எடுத்திருந்தது.

இலங்கை கோஷ்டி முதலாம் இன்னிங்ஸில் சகல விக்கெட் நஷ்டத்துக்கு 213 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 267 ரன்களும் எடுத்திருந்தது.

லாகூரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி இலங்கை கோஷ்டியை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்திருந்தது.

மூன்றுவது டெஸ்ட் போட்டி கராச்சியில் வருகிற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

### "பட்டம் பெறுபவர்களால் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வைபவத்தில் யாழ்ப்பாண மக்கள் சார்பில் பாராட்டுப் பத்திரம் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது.

கல்வித்துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் சமயத்துறையிலும் மற்றும் பல துறைகளிலும் அடக்கமாகப் பெருந் தொண்டாற்றி வரும் திரு. சினிவாசகத்துக்கு எப்போதோ இந்தப் பட்டம் அளித்துக் கௌரவித்திருக்க வேண்டுமென்றும் முதலியார் முத்துத்தம்பி கூறினார்.

வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பேசுகையில், வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு திரு. சினிவாசகம் ஆற்றிய பணிகளையும் வழக்கறிஞர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில், எந்த விஷயத்தையும் சலசலப்பின்றி அடக்கமாக, அமைதியாகச் சிறாகச் செய்து முடிக்கும் தன்மையையும் குறிப்பிட்டனர். ஸ்ரீ. கே. சீதாராம சாஸ்திரி, சினிவாசகம் தம்பதிகளை ஆசிர்வதித்தார். திரு. ஆர். இராசரத்தினம் திரு. சினிவாசகம் கூட்டுறவுத் துறையில் செய்துவரும் சேவைகளையும் திரு. என். சபாரத்தினம், அவர் ஆசிரிய உலகுக்கு செய்துவரும் சேவைகளையும் திரு. எஸ். மகேஸ்வரஐயர் பேசுகையில் கூட்டுறவு வீடமைப்புச் சங்கம் அமைத்து அவர் ஆற்றும் பணிகளையும் திரு. எஸ். பரநிருபசிங்கம் பேசுகையில் பாற்பண்ணைச் சங்கத்தை அமைத்து ஆற்றும் பணிகளையும் எடுத்துக் கூறினர்.

பல சங்கங்களின் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் சினிவாசகம் தம்பதிகளுக்கு மாலைகள் சூட்டப்பட்டன. திரு. சினிவாசகம் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### விற்பனைக்கு

B. S. A. மோட்டார் சைக்கிள் EN சீரிஸ், மன்ரக் மேஜர். விபரங்களுக்கு:- N. செல்லத்துரை, மார்க்கெட் ஒழுங்கை, சுன்னாகம். 1169

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org